வெளியீடு 1,

# யார் இந்த பார்ப்பனர்?



"விலக்குவோம் பார்ப்பனரைச் சமுதாயத்திலிருந்து"
"விரட்டுவோம் பார்ப்பனரை இந்நாட்டிலிருந்து"

என்ற உறுதியைத் திராவிடர்கள் உள்ளத்தில் உண்டாக்குவதே எங்கள் குறிக்கோள். சாதியை ஒழிக்கச் சட்டம் எரித்த தோழியர்களுக்கும், தோழர்களுக்கும் காணிக்கையாக இச் சிறு நூலைப்

...விடர் மாணவர் கழகம்

மதுரை.

14—1—1958.

V2119:J7M81
NS8
112537

# யார் இந்தப் பார்ப்பனர்?

சதுமறையை, சாத்திரத்தை, சண்டாள மனுநீதியைக் காட்டி, 2000 ஆண்டுகளாக உன்னை அடிமைப்படுகுழியில் வீழ்த்தி வைத்த வேதியர் கூட்டத்தை விரட்டியடிக்க விழித்தெழு தமிழா! சிறைக்கஞ்சாச்சிங்கம், திராவிடத்தை மீட்கவந்த மாவீரர், ஈரோட்டு வேந்தர் பெரியார், 'இனப் போராட்டம் துவங்கிவிட்டேன். இனி அந்த நரிக்குணம் படைத்த நயவஞ்சகப் பார்ப்பனக்கூட்டத்தை அரைக் கணமும் என் நாட்டில் விட்டுவைக்கமாட்டேன். புறப்படு மறத்தமிழா, போர்க்களம் காட்டுகிறேன்' என்று இடிமுழக்கம் செய்தார். ஆத்திரப்பட்டோ, பொறுமை இழந்தோ போர்ப்பரணிபாடவில்லை அந்தப் புவிப் பெரியார். நெடுங்காலம் ஓயாமல் பேசினார். வெறிபிடித்த பார்ப்பனர்களுக்குச்சமதர்மம் போதித்தார். எத்துணை அடக்கமான, அன்பான, உருக்கமான வேண்டுகோளையும், துச்சமெனத்தள்ளி; துட்ட மனதுடன், வீராப்புப் பேசிய நிலை கண்டபின்பே, பூனை கருவாட்டின் ருசியை மறக்காது—பார்ப்பானும் சாதித்திமிரைக் கைவிடமாட்டான், என்ற முடிவிற்கு வந்தார். எதைச் செப்பனிட முடியவில்லையோ அதை அழித்துவிட வேண்டியது தான், ஆபத்தில்லாததும், பாதுகாப்பானதுமான முறை—Which can not be mended should be ended-என்று தெளிவாக்கினார்.

No. 112537

போர்க்கோலம் பூண்டால்தான் குறிக்கோளை எட்ட முடியும் என்ற கட்டத்தைத் தொட்டுவிட்ட பிறகு, மிதவாத ஓலமிட்டு, 'ஜனநாயக' வர்ணஜாலங்காட்டி, தப்ப நினைக்கும் கொடியவரை என்னவென்று அழைக்க முடியும்? உன்னை, உனது எதிரி அவன் காலிலே போட்டு மிதித்துக்கொண்டிருக்க வழி வகுத்து, பாதுகாப்பும் அளிக்கும் ஒரு சதிநாயகத்தை, நீ எப்படி 'சனநாயகம்'

என்று கூசாமல் ஒப்புக்கொள்ளத் துணிந்தாய்! சிந்தித்துப் பார் தமிழா! தொண்டு கிழவரல்லவோ, தோள்கள் தினவெடுத்த, விடுதலைப் பட்டாளத்தின் தலைவராகப் போர்க்கோலம் பூண்டு நிற்கிறார்! மானமுள்ள தமிழனே! வீறுகொண்டெழ வேண்டாமா நீ! பார்ப்பானுக்குப் பரிந்து, கனிவுரை பேச நினைக்கிறாயே! சேற்றிலே சிக்கிய புலியை விடுவித்த கோமாளியின் கதியல்லவா கிடைக்கும் உன் இனத்திற்கே! புத்தர்களை வெட்டிக் கொலை புரிந்தார்களே! அவர் கொள்கைகளையே குழிதோண்டிப் புதைத்தார்களே! புத்தம் அழிந்த வரலாற்றை மறந்துவிட்டாயா படித்தறிந்த தமிழ்மகனே! எத்தனையோ அறிஞர்களை வெட்டிக்குவித்த கொடியவரை வாய்ச்சொல்லால் தேற்றிவிட முடியுமா, உன்னால்?

வேதகாலம் முதலே உன்னை வீழ்த்தியழித்த கொடியவர் யார்? திராவிடத்தின் தந்தை, உந்தன் பெருந்தலைவர், வெண்தாடி வேந்தர் அதோ வெஞ்சிறையில் வாடிக்கிடப்பது யாரால்? ஒரு கணம் நினைத்துப்பார் தமிழா? யார் இந்தப் பார்ப்பனர்கள்? ஏன் இவர்கள் வெளியேறவேண்டும்? என்பதற்கு எத்தனை எத்தனை ஆதாரங்கள் வேண்டுமோ, அத்தனையும் அடங்கிய அணுகுண்டாம் இச்சிறு நூலை, தன்னல அடிப்படையிட்டு, புராணச்சுவரமைத்து, வேதக்கதவு செய்து, இனத்துரோக அகழிவெட்டி, பாவையரையும், சூழ்ச்சியையும், வஞ்சகத்தையும் தங்கள் படையாகக்கொண்டு, கடவுள் என்ற ஞாயிலின் பின்னிருந்து, நாத்தீகன், வகுப்புவாதி என்னும் அம்புகளைப் பெரியாரது பெரும்படையை நோக்கி எய்யும் இப் பார்ப்பனர், தீந்தமிழ்நாட்டில் அமைத்துக் கொண்ட ஆரியக்கோட்டையின் மீது வீசுகிறோம், வெளியிடுகிறோம். தன்னலக்காரர்களின் எண்ணங்களைத் தரைமட்டமாக்குங்கள்! தெளிவுகாண தொடர்ந்து படியுங்கள்.

TAMIL NADU ARCHIVES

# திராவிடரும் ஆரியரும்

பரந்துபட்ட இந்தியா எங்கும் பரவியிருந்ததே திராவிட இனம், ஆரியர் வருகைக்கு முற்பட்ட இந்தியா முழுமையும் தமிழும், தமிழின் கிளை மொழிகளுமே பரவியிருந்தன. "வட இந்தியா முழுமையும் பலுசிஸ்தானத்திலிருந்து வங்காளம்வரை திராவிடமொழி பேசுவோரே பரவியிருந்தனர்" என்று மொழிநூல் அறிஞர் சாட்டர்ஜி என்பார் 'வங்காள மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற நூலில் கூறுகிறார். இயற்கையோடு இயைந்த இன்பவாழ்வு நடத்திக்கொண்டிருந்தனர் திராவிடர். பிறப்பிலே பேதம் கற்பிக்கும் சாதிமுறை இல்லை. பொய்மை மலிந்த புராணங்கள் பெற்றெடுத்த காமக்கடவுளர்களை வணங்கினாரில்லை ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு, புல்வெளிகளைநாடி, நாடோடிகளாய் ஆரியர் அலைந்து கொண்டிருந்த நேரத்தில், ஆடை, அணி கொண்டு அலங்கரித்து, நகரமைத்து நாகரிகமாக வாழ்ந்தனர் திராவிடர். இந்த உண்மை, வரலாற்று ஆசிரியர்களின் முடிந்த முடிபாகும். திராவிடர்கள் உலகிற்கே நாகரிகம் கற்றுக்கொடுத்தனர் என்பதை The originators of the modern world civilisation என ஈராசுப்பாதிரியார் (Proto-Indo mediterranean culture-Page 21) கூறுகிறார். இதுபற்றி பி. டி. சீனிவாச அய்யங்கார் "சால்தியா நாட்டில் 6000 ஆண்டுகளுக்கு முன்னே குடியேறி, அந்நாட்டை உயர்நிலைக்குக் கொண்டுவந்த 'சுமேரியர்' என்பவர் தமிழரது ஒரு பிரிவினரே" என்று தமது 'இந்திய சரித்திர'த்தில் (பக்கம் 13) குறிப்பிடுகிறார்.

"நமக்குத் தெரிந்தவரையில் இந்தியாவில் முதன் முதலில் வசித்து வந்தவர்கள் திராவிடர்கள்; இப்பொழுதும்கூட தமிழ்நாட்டில் வசிப்போரில் பெரும்பாலோர் திராவிடர்களின் சந்ததிகளேயாவர்" (நேரு மகளுக்கு எழுதிய கடிதங்கள்) என நேரு திராவிடர்களைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். எண்ணத்தொலையாத காலத்திற்கு முன்

பிருந்தே, இந்நாட்டில் வாழ்ந்து வருபவர் திராவிடர். தொன்மைச் சிறப்பிற்கு ஓரினம் உலகத்தில் உண்டென்றால் அந்த இனம் நம் திராவிட இனமே. "தென்னிந்தியாவில் தோன்று தொட்டு வாழ்ந்துவரும் பழங்குடிகளே திராவிடர்கள் என்பதே உண்மையாகும்" என சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் வரலாற்றுப் பேராசிரியர் வி. ஆர் இராமச்சந்திர தீட்சிதர் 'வரலாற்றுக்கு முந்திய தென்னிந்தியா' என்ற நூலில் (பக் 140) கூறுகிறார். "வடமொழி பேசிய ஆரியர்கள் கி. மு. 1000 ஆண்டுகளுக்கு முன்னால், மேற்கிலுள்ள கணவாய்களின் வழியாக வட இந்தியாவிற்குள் புகுந்தனர் தொன்மைச் சிறப்பு வாய்ந்த திராவிட நாகரிகத்திலிருந்து பலவற்றைக் கற்றுக்கொண்டனர்" என எச். ஜி. வெல்ஸ் 'உலக வரலாறு' என்ற நூலில் (XIX) எழுதியுள்ளார்.

ஆரியர்கள் வடநாடு முழுதும் பரவி, உயிர்ப்பலி கொடுத்து, யாகம் பல செய்து, ஒழுக்கத்தின் இழிந்த மக்களாய் வாழ்ந்தனர். சிறு கூட்டத்தாரான இவர்கள், சிற்றிடைச் சிங்காரிகளைக்கொண்டு, மயக்கு மொழியால் மன்னர்களை வீழ்த்தி, 'ஆயிரம் வாளை நம்பி ஒரு காரியத்தில் வெற்றி காண்பதைவிட அழகிய பெண் ஒருத்தியைக்கொண்டு ஆயிரம் காரியங்களைச் சாதிப்பது சுலபம்' என்ற கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தை அடியொற்றி, வெற்றிக்கொடி உயர்த்தினர். மொழியை அழித்துவிடு; அது விழியைப் பிடுங்குவதை ஒக்கும் என்பது ஓர் உண்மை. இன உணர்வு இழந்து, அறியாமை இருளில் திரியும்படி திராவிட இனத்தை அடிமையாக்க வேண்டுமெனில், வடமொழியைப் புகுத்துவதே சாலச் சிறந்தது என்று எண்ணிய ஆரியர்கள், தம் மொழியைத் திணிப்பதில் பெருமுயற்சி எடுத்துக்கொண்டனர். ஒரு சிறு கூட்டத்தாராக இருப்பினும், நாட்டாட்சியிலும், சமுதாயத்திலும் முதன்மையான இடத்தைப் பெற்றதால், தங்கள் மொழியைப் பெரும்பாலோரானவரிடம் பரப்பி வடநாட்டில் பெருவெற்றி பெற்றனர். இதைத்தான் புளூம்

பீல்டு என்ற மொழி நூல் அறிஞர் 'மொழி' என்ற நூலில் (பக்கம் 469, விளக்குகிறார்.

"சமஸ்கிருதத்தில் 'ஆரிய' என்ற அதே வார்த்தை இருக்கிறது அதற்குக் கௌரவமுள்ளவன் அல்லது மேற குலத்தில் பிறந்தவன் என்று பொருள். சமஸ்கிருதம் பேசியதால், தாங்கள் கௌரவமுள்ளவர்கள், மேற்குலத் தில் பிறந்தவர்கள் என்று எண்ணினார்கள். தற்காலத் தவர்களைப் போல அதிக கர்வம் படைத்திருந்தனர்" என நேரு தம் மகளுக்கு எழுதிய கடிதங்களில் குறிப்பிடு கிறார். இவர்கள் தென்னாடு புகுந்து, திராவிட மொழி களுக்கு இழைத்த தீங்கு பல. "... அம் மொழிகளில் வட சொற்களைக் கலந்தும், அம் மொழிகளைத் தமிழினின்று வேறுபடுத்தினதும், திராவிட மொழிகளுக்கு வடமொழி யைத் தாயாகக் காட்டியதும், தமிழைத் தாழ்த்திவிட்டு, வடமொழியைத் தலைமையாக்கியதும், ஆரியத்தால் திராவிடர்க்கு நேர்ந்த தீமைகளாகும்" என தேவநேயப் பாவாணர் (ஒப்பியன் மொழிநூல் பக்கம் 36) கூறுவது உண்மையே.

கன்னடம், தெலுங்கு, மலையாளம் என திராவிட மொழிகளைப் பிரித்து, மொழிவழி தமிழர், கன்னடர், தெலுங்கர், கேரளர் என வேறுபடுத்தி வேற்றுமைக்கு வித்திட்டு, என்றென்றைக்கும் அவர்கள் ஒன்றுபடவிடாது, திராவிட இன உணர்வை மாய்த்து, அவர்களுக்கிடையே மூட்டிய பூசலிலும் பிணக்கிலும் பூசுரராய் வாழ்ந்தனர். பூத்துக் குலுங்கிய மரத்திற்கோர் புல்லுருவியாய் வந்தனர். "தமிழைப்போலவே, தெலுங்கு, கன்னட மொழிகள்; ஆரியர் வருகைக்கு முன்னால், வடமொழிக்கலப்பின்றித் தான் இருந்தன ஆனால் வடமொழிப் புலவர்கள் அம் மொழிகளைத் திருத்தத்தொடங்கிய பொழுதுதான், ஏராளமான வடசொற்களைப் புகுத்தத் தொடங்கினர்" என இராமகிருஷ்ணய்யா என்பார், 'திராவிடமொழி நூலில்' (பக்கம் 40-41) கூறுகிறார். 11-ஆம் நூற்றாண்டில்



நூல் (பார்ப்பான்) எனில் கோல் சாயும் - ஔவை.

தான் சமஸ்கிருத வடக்கத்திப் புராணங்கள் எல்லாம் தெலுங்கில் மொழிபெயர்க்கப்பட்டு சமஸ்கிருதக் கலப்புத் தெலுங்கு மொழி தோற்றுவிக்கப்பட்டது. இம்மொழி பெயர்ப்பினை நன்னயா என்ற பட்டரே செய்தார். வட மொழிப்பாட்டு முறைகளும், தெலுங்கில் புகுத்தப்பட்டன. இக்கருத்தைப் பேராசிரியர் ஜி. ஜே சோமயாஜி என்பவர் 'தெலுங்கில் சமஸ்கிருதக் கலப்புகள்' என்ற கட்டுரையிலே தெளிவாக்குகிறார். எழுத்தச்சன் போன்ற வடமொழிப் புலவர்கள், இராமாயணம் போன்றவற்றை மலையாளத்தில் மொழி பெயர்த்து, வடமொழியை ஒட்டி மலையாளத்திற்கு இலக்கணம் அமைத்தனர். ஆனால் தமிழ்நாட்டில் நுழைந்த ஆரியர்கள் சிற்சில வடசொற்களைத் தமிழ் மொழியில் கலக்குப்படி செய்தனரே தவிர தமிழை முற்றிலும் அழித்தொழிக்க முடியவில்லை. "ஆரியக் குருமார்கள் தங்கள் மறைகளைத் தமிழ்மக்கள் நம்புப்படி செய்து பார்ப்பனர் என்னும் பெயரையும் மேற்கொண்டனர்" என கா. சுப்பிரமணிய (பிள்ளை) 'இலக்கிய வரலாறு' என்ற நூலில் (பாகம் 1 பக்கம் 110) குறிப்பிடுகிறார்.

பார்ப்பனருக்கும் தமிழ்நூல்கள் கூறும் 'அய்யருக்கும்' சிறிதும் தொடர்பில்லை. அய்யர் எனின் 'வியக்கத் தக்க குணமும் செயலும் உடையவரையே' குறிக்கும். பின்னர் அது ஒரு குடும்பத்தில்தலைவராய், குணத்திலும் செயலிலும் சிறந்தாரை உணர்த்துதற்கு வழங்கலாயிற்று. இது. 'இளமா எயிற்றி இவை காண் நின் அய்யர்' என்ற சிலப்பதிகாரவேட்டுவவரியினால் அறியப்படும். எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணருக்கும் ஒரு குலத்திற்கு ஒரு நீதியுரைக்கும் மனுவைப் பின்பற்றி, தீண்டாதார் என்பாரின் உழைப்பிலே உண்டு கொழுக்கும் பார்ப்பனருக்கும் தொடர்பில்லை. தமிழில் சான்றோர்களைக் குறிக்க வழங்கிய சொற்களைத்தங்களைக் குறிக்கப் பயன்படுத்திக்கொண்டனர், பார்ப்பனர். ஆரியாது பண்பாட்டை, மொழியை, கலையை இக்நாட்டில் பரப்பி,

செந்தமிழர் சமுதாயத்தைச் சீரழித்து, நாயினும் கீழாய் நம்மை நலியச் செய்த பார்ப்பனரின் கொடுமைகண்டு, ஓய்தல் இன்றி திராவிடரின் நலம் கருதி உழைப்பவரின் சிந்தனைக்குச் சில.......

# பார்ப்பனர் பண்பும் பழக்க வழக்கமும்

அந்நாள் ஆரியர் காட்டிய பாதையில் செல்பவரே இந்நாள் பார்ப்பனர். பூசுரர் என்றும், தேவர் என்றும் (மனு அத் 1 சுலோ 94) தங்களை உயர்த்திச் சொல்லிக் கொண்டு, விரித்த வேத இதிகாச புராணப் புரட்டு என்னும் மாயவலையில் வீழ்ந்து, மயக்குற்ற திராவிடர் களுக்கு இவர்கள் அளித்த பட்டம்தான் 'சூத்திரன்'. தீண்டாமை பற்றியும், தீட்டுபற்றியும் பராசரசுமிருதி,

## ஆரியருடன் வாழ இசையோம்!

**சொன்னவர் யார் ...... ?**

''கிளியும் குயிலும் மாடப்புறாவும் மயினாவும், ஒரே சோலையில் உல்லாசமாக வாழும்; ஆனால் வல்லூறு வட்டமிடக் கண்டால் அதுவும் நம்மைப் போல் ஒரு பட்சிதானே என்று கருதாது, வட்ட மிடும் வல்லூறு தம்மை வதைக்கும் என்பதறிந்து! அதுபோலவே திராவிடப் பெருங்குடி மக்கள் தம்மில் சிற்சில வேறுபாடு கோண்டோராக இருப்பினும் ஒரே வட்டாரத்தில் வாழ இசைவர். ஆனால், தமது சுயமரியாதையைச் சூரையிடும் ஆரியருடன் வாழ இசையார்.''

('சீறும் சில்லரைகள்' - திராவிடநாடு தலையங்கம் 28-6-1942)

 கல்மனப் பார்ப்பானையும் படைத்து

பிராயச்சித்த காண்டம் 22-29, 36, 45 சூத்திரங்களில் கூறப்பட்டுள்ளதைப் பின்பற்றி திராவிடர்களை இழிவு செய்வதே பார்ப்பனரின் பழக்கம்.

பார்ப்பனர்கள் எந்நாளும் நம்முடன் சேர்ந்து வாழ்ந்ததே இல்லை. உயர்சாதிக்காரராக இவர்கள் அக்ரகாரத்தில்தான் வாழ்வர்; இவர்களுடன் திராவிடர்கள் வாழவிரும்பார்.

ஆரிய முறை பற்றி, சாதிசமயப் பிளவூட்டி, சண்டைமூட்டி, ஆற்றல் கெடுத்து, சமுதாய ஒற்றுமை சிதைத்த சழக்கரே இவர்கள். வேத, இதிகாசம் போன்ற ஆரியர்களின் புன்மைக் கருத்துக்களடங்கிய நூல்களை இந்நாட்டில் புகுத்தி, மனிதன் பிறப்பதற்கு முன்பிருந்தும், இறந்த நெடுநாட்கள் கழித்தும் பணம் பிடுங்குவதற்காகச் சடங்குகளை நுழைத்தனர். "இயற்கையின் எழிலைத்தான் தமிழர் இறையாக வணங்கினர்" என்று திரு. வி.க.வும் (முருகன் அல்லது அழகு பக் 19) "தமிழர்கள் இயற்கை பற்றிய கொள்கைக்கும் தமிழ் சமயத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. இயற்கைப் பொருள்களாகிய பகலவன், திங்கள், மலை, நதி, கடல், போன்றவை சமய வளர்ச்சிக்குத்துணைபுரிந்தன" என பேராசிரியர் தனிநாயக அடிகளும் (பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை. பக். 81) விளக்குகின்றனர்.

## இன்னும் புரோகிதருக்கு இடமா?

**"பிராமணப் புரோகிதர்களும் பூசாரிகளும், பிராமணர் அல்லாதாருடைய பொருள்களைக் கவருவதற்காகத் தொன்றுதொட்டுச் செய்து வரும் சூழ்ச்சிகளையும், மோசங்களையும், கொலைகளையும், பிறபல தீய செயல்களையும் எடுத்துக் கூறி பிராமணரல்லாதார்கள் இன்னும் பிராமணப் புரோகிதர்களையும் பூசாரிகளையும் விரும்புகிறார்களா ?"** —வ. உ. சிதம்பரம் பிள்ளை,
ஞானசூரியன் முன்னுரை.

வாழ வாய்ப்புத் தந்த தமிழ்நாட்டைப் பாழடைந்த நிலமாக்கித்தமிழனை வாழவும்விடாது, வீழ்ந்த தமிழனி டத்துப் பொருள் பறிக்கும் 'பிணத்தில் இருந்து பிடுங் கியவரையில் ஆதாயம்' என்ற கழுகுக் குணம் கொண்டவர் இப் பார்ப்பனர்.

"இந்நாளில் பொய்மைப் பார்ப்பார்—அவர்
ஏது செய்தும் காசுபெறப் பார்ப்பார்

.....................

பிள்ளைக்குப் பூணூலாமென்பான்—நம்மை
பிச்சுப் பணம் கொடெனத் தின்பான்
கொள்ளைக்கே சென்றாலும் வஞ்சம்—செய்து
கூசாமல் வாங்கிடுவான் லஞ்சம்
பேராசைக் காரனடா பார்ப்பான்—ஆனால்
பெரியதுரை என்னில் உடல் வேர்ப்பான்
யாரானாலும் கொடுமை செய்வான்—பணம்
அள்ளியிட வில்லையேனில் வைவான் என பார்ப்

பனப் பாரதியே கூறுகிறார். பார்ப்பானின்" கொடுங் குணத்திற்கு வேறென்ன சான்று வேண்டும்?

பார்ப்பனர் வாழ்வு முறையும், பழக்கமும், வழக்க மும் வேதத்தையும் மனுவையும் அடிப்படையாகக் கொண்டவை. சூடாகரணம் என்று குடுமி வைக்கும் சடங்கு பாராகரகிருஷ்ய சூத்திரத்தில் உள்ளபடி நடத்தப் படுகிறது. பார்ப்பனச் சிறுவன் விளையாட்டை விட்டு, படிப்பை ஆரம்பிக்கும்பொழுது குருவிடம் உபதேசம் பெற்று பிராமணன் என்ற இருபிறப்பாளனாக ஆகிறான். இதைக் குறிக்கும் பூணூல் தரித்தல் என்ற சடங்கு சாயங் காயனர், ஆசுவலாயனர், ஆபஸ்தம்பர், யாக்ஞயவல்கியர் ஆகியோர் கூறியுள்ளபடி ('அஸ்ட வர்ஷம் ப்ராஹ்மண முபனயித, தமத்யாபயித்) 8-ஆவது ஆண்டில் பார்ப்பா னுக்கு உபநயனம் செய்து கல்வி கற்பிக்கவேண்டும் என்ற சடங்கு இன்றும் பார்ப்பனரிடம் பெருவழக்காகஉள்ளது. வேதத்தைப் படிப்பதற்கும், புரியாத மந்திரத்தை உளறிக்

கொட்டும், புரோகிதத் தொழில் புரிவதற்கும், கல்லாத மக்களின் விருப்பத்தைக் கடவுளுக்கு வடமொழியில் மொழிபெயர்த்துச் சொல்லும் அர்ச்சகனாக ஆவதற்கும் உரிமையளிப்பது இப்பூணூல். உழைக்காது உண்டு கொழுக்கும் உயர்சாதிக்காரராய் வாழ்கின்றனர் இப் பார்ப்பனர் என்பதை உலகிற்கு அறிவித்துக்கொண்டிருப் பவையே-உச்சுக் குடுமியும் பூணூலும். இதற்கு ஆதாரமாக மனுவிலுள்ளதைப் பாருங்கள். 'ஆசாரியன் விதிப்படி எந்த இரண்டாவது பிறப்பை பிரம்ம உபதேசத்தி னால் உண்டுபண்ணுகிறானோ, அந்தப் பிறப்பானது அழிவற்றதாயும், மூப்பற்றதாயும், புண்ணிய லோகங் களைக் கொடுக்கிறதாயும் இருக்கின்றது' (மனு. அத். 2 சுலோ. 48:)

திருமணச்சடங்கைப் பொறுத்தமட்டிலும் இன்றையப் பார்ப்பனர் இருக்குவேதம் 10-ஆம் மண்டிலம், அதர்வண வேதம் 12-ஆம் மண்டிலம் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள தைப் பின்பற்றுகிறார்கள். ஆரியர் செல்வாக்கிற்கு முற் பட்ட காலத்தில் எழுதப்பட்ட தமிழ் நூல்களில, நெருப் பிற்கும், அம்மிக்கும், அருந்ததிக்கும், திருமணத்திற்கும் தொடர்பு இருந்ததாகத் தெரியவில்லை. இவைகளைப் பார்ப்பனரே புகுத்தினர். பொருள் விளங்கா, வடமொழி யில் சோமன், கந்தர்வன், அக்கினி ஆகியோர் அனுபவித்து 4-ஆம் கணவனுக்குப் பெண்ணைக் கொடுப்பதாகக் கூறி நம மானத்திற்கு உலை வைக்கிறவர் பார்ப்பனர் (விளக்கம் வேண்டுவோர் 1929 ஆகஸ்டு 4 குடியரசில் கைவல்யம் கட்டுரை காண்க) கற்பிற்கு இவர்கள் மதிப்பளிப்பதில்லை என்பது மறைமலையடிகளின் 'மாணிக்கவாசகர் காலமும் வரலாறும்' (பக்கம் 215-218) என்ற நூலில் நன்கு விளக்கப்பட்டுள்ளது.

'அபுத்ரா, குர்வனுஞ்ஞாதா, தேவாமபுத்ர காமய்யா, ஸபிண்டம் சகோதரம வாக்குதாபயக்தாம் ருதாவியாத' என்ற யாக்ஞவல்கியாதுசுலோகத்திற்குத் தனது கணவன் இறந்துவிட்டால் அல்லது புத்திரனை உண்டுபண்ண

தகுதியில்லாவிட்டால், பிள்ளைப்பேற்றை விரும்புகிற பெண், பெரியோர்களின் அனுமதியைப் பெற்று, தன் கணவனது சகோதரன், அல்லது அந்தக் குடும்பத்தில் யாரையேனும் புணர்ந்து கொள்ளலாம் என்பதே பொருளாகும்.

பெண்ணைப் பணத்திற்கு விற்கும் சந்தைப் பொருளாகக் கருதுவது இவர்கள் வழக்கம் பெண்களை அடிமைகளினும் கேவலமாய் நடத்த வேண்டுமென்ற 'பத்ம புராணத்தின்' புன்மைக் கருத்துக்களை இந் நாட்டில் பரப்பி, 'பெண்ணுக்கு அடிமைத் தளையிட்டவர் இப் பார்ப்பனர். பெண்ணை அஃறிணைப் பொருளாகக் கருதி, 'கன்னிகாதானம்' என்று வழங்கிடும் முறை தமிழருடையதன்று கன்னிக்குக் காதலனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை வழங்கிடும் தமிழ் நெறிபற்றி,

"கொடுப்போர் இன்றியுங் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய காலையானே"

என, தொல்காப்பியம் குறிப்பிடும். மணம் முடிந்தும், சாந்தி முகூர்த்தத்திற்குப் பின்புதான் கணவனும் மனைவியும் கூடமுடியும். 'ஓரிற் கூடிய உடன்புணர் கங்குல்' (அகநானூறு 86) என்ற தமிழ் வழக்கிற்கு இது முற்றிலும் மாறுபட்டது.

"சோமன் முதலில் உன்னை அறிந்தான். பின் கந்தர்வன் உன்னை அறிந்தான். உனக்கு மூன்றாம் வரன் அக்கினி. மானிட புத்திரனான நான் உனது நான்காம் கணவன். சோமன் கந்தர்வனுக்குக் கொடுக்க, கந்தர்வன் அக்கினிக்குக் கொடுக்க, அக்கினி உன்னைச் செல்வத்துடன் எனக்குக் கொடுத்தான்" என நெருப்பினை நோக்கிக்கூறும் இம்மந்திரம் ஒன்றுபோதுமே, ஆரியப் பார்ப்பனர் கற்பிற்கு அளித்த மதிப்பினைப் பற்றித் தெரிந்துகொள்ள.

உயிரினுஞ் சிறந்தன்று நாணே, நாணினுஞ்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்றெனத்
தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு
(தொல்காப்பியம், களவியல்-22)

என்ற தமிழ்ப் பண்பாட்டிற்கு முற்றிலும் ஒவ்வாததாகும்.

கல்வி கற்றலைத் தங்களுக்கென ஒதுக்கி வைத்துக் கொண்டனர் வடநூல்களைக்காட்டி (சூத்திரன் கல்வி கற்கக்கூடாது. பராசர சுமிருதி அத். 2. சு. 16) "சுருங்கக்கூறவேண்டுமானரல் பிராமணர்கள் கல்வியைத் தங்களுக்காகச் சொந்தமாக்கிக் கொண்டு தங்களுடைய நிலைமையைத் துஷ்பிரயோகப்படுத்தி, தாங்கள் இஷ்டம் போல் எழுதிய கட்டுக்கதைகளுக்கு எல்லா விசயங்களையும் உட்படுத்தி வைத்தார்கள். இந்தக் கற்பனைக் கதைகள் அனைத்தும் வேண்டுமென்றே கெட்ட எண்ணத்துடன் சாமார்த்தியமாய்ப் பிறரை அழுத்தி தங்கள் நிலைமையை உயர்த்திக் கொள்வதற்காகவே எழுதப்பட்டவையாகும்" என்று ஹென்றி பெவரிட்ஜ் (விரிவான இந்திய சரித்திரம் பாகம் 1. பக். 15 ) விளக்குகிறார். குறளும், புறநானூறும் இவ்வாறு கூறவில்லை. பார்ப்பனரது இக்கொடுமைகண்டு கொதித்துக் கூறுகிறார் விவேகானந்தர்:- "ஒரு பாம்பு ஒருவனைக் கடித்து விட்டால் அவன் பிழைக்க வேண்டுமானால் கடித்த அப்பாம்பே அதன் விஷத்தை உறிஞ்சி எடுக்க வேண்டும் என்ற பழமொழி ஒன்று உண்டு. அதுபோல் தன்னால் உண்டான கெடுதலைத் தானே தீர்க்க பிராமணன் முன்வர வேண்டும்" (இந்தியப்பிரசங்கங்கள் — பக்கம் 191-196)

மானத்திற்காக வாழ்வது மறத்தமிழர் பண்பு. வாழ்விற்காக மானத்தை விற்று விடுவது பார்ப்பனர் பண்பு (மனு, அத். 10. சுலோ. 104) "மிதமிஞ்சிய சுயநல உணர்ச்சி என்பது பார்ப்பானுடைய பொதுவான பண்பு, அவனைக் காட்டிலும் உயர்ந்தது வேறொன்று மில்லை; எனவே அவன் யாருக்கும் கடமைப்பட்டவனில்லை என்ற கொள்கையின் அடிப்படையிலேயே அவன் வாழ்க்கை முழுதையும் அமைத்துக்கொண்டிருக்கிறான். தன்னுடைய நன்மைக்குப் பயன்படும் என்றால் கொஞ்சமும் தயங்காது பொது நன்மையையோ அவனது நாட்டையோகூட காட்டிக்

கொடுத்துவிடுவான். அவனது வாழ்க்கை உயர்வதாக இருந்தால் படுகொலை புரிவதற்கும் நன்றிகொன்று வாழ்வதற்கும் வேறு எவ்வகையான அயோக்கியத்தனத்தைச் செய்வதற்கும் அவன் பின்வாங்கமாட்டான். மற்ற மனிதப்பிறவிகளிடமிருந்து தன்னை உயர்ந்தவனாகக் கருதி விலகி வாழ்வதைத் தன்னுடைய கடமையாகக் கருதுவதோடு நிற்பதில்லை. அவன் இனத்தில் பிறக்காத ஒவ்வொருவரையும் மனமார வெறுக்கவும், பகைக்கவும் செய்வான்'' என அபேடுவா 'இந்துக்களின் பழக்க வழக்கங்கள்' என்ற நூலில் கூறுகிறார்.

"Intense selfishness is also a common characteristic of a Brahmin. Brought up in the idea that nothing is too good for him, and that he owes nothing in return to any one, he models the whole of his life on this principle. He would unhesitatingly sacrifice the public good or his country itself, if it served his own interests; and he would stoop to Treason, ingratitude; or any deed, however black, if it promoted his own welfare. He makes it a point of duty not only to hold himself aloof from all other human beings, but also to despise and hate from the bottom of his heart every one, who happens not to be born of the same caste as himself" – **Abbe dou bois-hindu manners customs and ceremonies page 315.**

## பார்ப்பனர் பண்பு

பாரதிதாசன் எழுச்சியுரை.

பார்ப்பான்பால் படியாதீர்; சொற்குக்கீழ்ப்படியாதீர் உம்மை ஏய்க்கப்
பார்ப்பான்; தீதுறப் பார்ப்பான் கெடுத்துவிடப் பார்ப்பான் எப்போதும்
பார்ப்பான்
ஆர்ப்பான் நம் நன்மையிலே ஆர்வமிக உள்ளவன்போல்!
நம்பவேண்டாம்.
பார்ப்பானின் கையை எதிர்பார்ப்பானையே பார்ப்பான் தின்னப்
பார்ப்பான்.

'பிராமணாள் போஜனப் பிரியா' என்றொரு பழமொழி உண்டு. உண்ணுவதற்காக வாழ்பவர் பார்ப்பனர். வாழ்வதற்காக உண்ணுபவர் தமிழர். எப்படியாவது வாழ வேண்டும் என்பது பார்ப்பனர் கண்ட முடிவு. வாழும் நெறியறிந்து வாழவேண்டும் என்பது தமிழரின் முறை. 12 முழத்துணி அரைக்கும், 6 முழத்துணி மேலேயும் உடுத்தி மூலக்கச்சம் வைத்துக் கட்டுதல் பார்ப்பனரது முறையே 4 முழமே தமிழர்முறை. பார்ப்பனப் பெண்கள் சேலையுடுப்பதும் வேறுபடுகிறது. "பார்ப்பனர்களின் இழி குணங்களைப்பற்றி முழுமையும் வர்ணிப்பதற்கு எனது பேனா மறுக்கிறது"

("My pen would refuse to describe all their wrong doings") 'இந்துக்களின் பழக்க வழக்கம்'— பக். 306) என்னும் அபேடுவாவின் கூற்று பார்ப்பனரின் கயமைக் குணத்திற்கு ஒரு அளவுகோளாக அமைகிறது

"சத்தியம் இன்றித் தனிஞானம் தானின்றி
ஒத்தவிடயம் விட்டு ஓரும் உனர்வின்றி
பத்தியும் இன்றிப் பரன் உண்மை இன்றி
பித்து ஏறும் மூடர் பிராமணர் தாம்"

என்ற திருமூலர் வாக்கு இதை மெய்ப்பிக்கிறது.

உடன்பிறந்த, வயதில் மூத்தவர்களை, வாடி, போடி, அவள், இவள் என மரியாதை இன்றிப் பேசும் முறையும், யாவரையும் மாமா என உறவு கொண்டாடுவதும், கோத்திரம், வர்ணம் விசாரிப்பதும்பார்ப்பனருக்கேஉரித்தானது, ஆவிற்கு நீரென இரத்தல் இழிவென்பது தமிழர்முறை. உஞ்சி விருத்தி செய்து உடலை வளர்ப்பர் பார்ப்பனர். (பிரம்மச்சாரி பிச்சை எடுத்தே உண்ணவேண்டும்— மனு. அத். 2 சு. 188) "பிராமணர் உழுது பயிரிட்டால் மகா தோசத்தை அடைவர்" என பராசரசுமிருதி (அத். 2 சூத். 7) கூறுவதைப் பின்பற்றுபவர் பார்ப்பனர். உழுதுண்டு வாழ்வாரை, மற்றவர் தொழுதுண்டு பின் செல்லவேண்டும் என்பது தமிழர்நெறி. உயிர்ப்பலியிட்டு, நெய்யைக்கொட்டி, வேள்வி செய்தலும், சந்தியாவந்தனம் செய்தலும் தமிழர்களிடத்து இல்லை. நெய்யைக்கொட்டிச்

செய்யும் ஆயிரம் பார்ப்பன வேள்வியைக் காட்டிலும், ஒன்றன் உயிரைக் கொலை செய்து அதன் இறைச்சியை உண்ணாதிருத்தலே மேலான அறம் என்பது வள்ளுவர் முடிவு. தைத்திரிய பிராஹ்மணம், பிராசினஸ் சுருதி இவைகளில் கூறப்பட்டுள்ளபடி சந்தியாவந்தனம் செய்யும் பார்ப்பனரை இன்றும் காணலாம். (ஆசமணீயத்தால் (நீர் உட்கொள்ளல்) தூய்மைப் படுத்திக்கொண்டு, இரண்டு சந்தியாகாலத்திலும் (காலை, மாலை) தூய்மையான இடத்தில் அமைதியான உள்ளத்துடன் முறைப்படி செபம் செய்வது மூலமாய், தினமும் கடவுளை வணங்க வேண்டும். மனு. II, 222) 'முன்னம் நீரை மந்திரத்தோடு மூன்று தடவை உண்டு பின் நீரினால் வாயை இரண்டு தடவை துடைத்து, பின் கண், காது, மூக்கு, தோள், மார்பு, தலை, இவைகளையும் துடைக்க வேண்டியது. இதுவே ஆசமநம்' (மனு. அத் 2. சுலோ. 60) இந்த வழக்கத்தைப்பார்ப்பனர்கள் இன்றும் கையாளுகின்றனர். இவ்வாறு ஆரிய முறையைப் பின்பற்றிய தோடமையாது, அதனைக்காட்டி, தமிழரை ஏய்த்துப் பிழைக்கின்றனர்.

## எத்தர் கூட்டத்தின் சூழ்ச்சி

மறைமலையடிகளின் இகழ்ச்சி உரை.

"...கருவாய் வயிற்றிலிருக்கும்போதும், மகவாய்ப்பிறந்து, அரைசுழிக்கும்போதும், ஆடையுடுக்கும்போதும், காது குத்தும்போதும், பள்ளிக்கூடத்திற் புகும்போதும் இறந்த பின்னரும், தொடர்பான செலவிற் கிரியைகளைச் செய்து செய்து நம் தமிழ் மக்கள் வறுமையிற் கிடந்தழலுமாறு புரிந்து, அவர் தம் பொருளாற் கொழுக்கத்தின்று இன்புற்று இரக்கமிலராய் வாழும் ஆரியக் குருக்கள் மார்தஞ் சூழ்ச்சியை எண்ணிப் பார்ப்போர் எவரேனும் உளரா?" (மேல்நாட்டவரும் கீழ்நாட்டவரும்)

**அறுசுவை உண்டிக்குப் பார்ப்பான் ஆறுகாத தூரம் ஓடுவான்.**

# அன்னை மொழியும் ஆரியப் பார்ப்பனரும்

"வடமோழி செயற்கையான வடிவில் மிக முதிர்ந்ததாகலின் வழக்கற்றுப்போய்விட்டது ஆனாலும் ஆரிய பிராமணரின் வழியினரான பார்ப்பனர் இன்று வடமொழியைத் தம்மால் இயன்றவரை பாதுகாத்து வருகின்றனர்... வடமொழியின் கடினம் பற்றிச் சில பார்ப்பனர் அதைக் கல்லாது இருப்பினும், அதன்மேல் வைத்திருக்கும் பற்றில் மட்டும், அதைக் கற்றவரினும் எள்ளளவும் குறைந்தவராகார்.... பார்ப்பனர் பிற மொழிகளைத் தம் தாய் மொழிகளாகக்கொண்டிருப்பது வடமொழி வழக்கற்றவிடத்து வேறு போக்கின்றியே அன்றி வேறன்று. பார்ப்பனர் வடமொழியைப் பேசாவிடினும் வளர்ப்பு மொழியாகக் கொண்டுள்ளமையின் அவர்களுக்கு வடமொழியாளர் என்று பெயர். மணிமேகலையில், வடமொழியாளர் (5,40) என்று பார்ப்பனருக்கும், வடமொழியாட்டி (13,73) என்று பார்ப்பனத்திக்கும் வந்திருத்தல் காண்க." என்று தேவநேயப் பாவாணர் —"ஒப்பியல் மொழி நூலில்" குறிப்பிட்டுள்ளார்.

வடமொழியிலிருந்து தமிழ் வந்தது என்று கூறி தமிழுக்கென இலக்கியமும், இலக்கணமும் இல்லையெனத் திரித்துக் கூறி, உள்ள உயர்ந்த பல இலக்கியங்களையும், கலைகளையும் அழித்தவர்கள் இப் பார்ப்பனர்களே. திசைமொழிகளைத் தேக்கெறியத் (ஏப்பமிட்ட) தின்ற செய்மொழியாம் வடமொழியின் புகழ்பாடி, கட்டிளமை திறம் குறையா கன்னித் தமிழன்னைக்கு வடமொழி நச்சுணவு ஊட்டியவர் இப் பார்ப்பனரன்றோ? தமிழால் உயர்ந்த பார்ப்பனத் தமிழாசிரியர்கள், 'வடமொழியைவிடச் சிறந்தது தமிழ்'என கூறியது இல்லை. "தமிழ்நாட்டிலுள்ள பார்ப்பனர் பிறந்தநாள் முதல் தமிழையே வழங்குகின்றார்கள். ஆயினும் அவர்கள் தாம் தமிழர் அல்லர் என்றும், தமக்குத் தாய்மொழி ஆரியம் என்றும் உணர்கிறார்கள். "ஆகவே அவர்களிடத்தில் தமிழனிடத்தில் எழுவது போன்ற தமிழ்மொழிப்பற்றை நாம் காணுதல் முடியாது"

---

என்று ந. சி. கந்தையா (பிள்ளை) ('தமிழ் வரலாறு'—பக். 12.) பார்ப்பனரின் தமிழ்ப்பற்று'! பற்றி விளக்கு கிறார்.

மணிப்பிரவாளம் என்ற கலப்பு நடையால் தமிழின் நடையழகைக் கெடுத்தனர். வாழ்வளித்த தமிழைத் தாழச் செய்தது மட்டுமல்லாமல் வசைபாடவும் செய்தனர். திருமங்கையாழ்வாரது பெரியதிருமடல் பிரபந்தம், பெரியவாச்சான்பிள்ளை உரையில்'தென்னுரை'என்பதன் பொருள்,'மிலேச்சசாதிபிதற்றும் தமிழ் எனப்பார்ப்பனர் எழுதிவிட்டனர். தமிழ்நாட்டில் வாழ்ந்தபோதிலும் தமிழ் சரியாகப் பேசத்தெரியாது. பேசுவதிலும், எழுது வதிலும் 90 விழுக்காடு வடசொல்லே. தமிழ் மறுமலர்ச்சி பெற்றிருக்கும் இக்காலத்தும் பார்ப்பனப் பத்திரிகைகள் வேண்டுமென்றே வடமொழிச் சொற்களைக் கொண்டே எழுதுகின்றன. சடங்குகள், பண்டிகைகள் அனைத்திற் கும் அப்தபூர்த்தி, வருஷாப்திகம், சந்தியாவந்தனம், சிரார்த்தம், பிராமணார்த்தம், விவாகசுபமுகூர்த்தம், உப நயனம், அக்ஷராப்பியாசம், கோகுலாஷ்டமி, சிரவணம், அமாவாஸ்யா, ஏசாதசி, தீபாவளி, உத்திராயண, தக்ஷி ணாயன, புண்ணியகால தர்ப்பணம், காயத்திரிஜெபம், ஸ்ரீராமநவமி, ரதசப்தமிபோன்ற வடசொற்களைப்பயன் படுத்துவர் "ஆரியர் கூறும் தமிழும், குருடரும் முட வரும் செல்லும் செலவும்" எனப்பேராசிரியர் தொல்காப் பிய மெய்ப்பாட்டியலில் நகைச்சுவைக்கு மேற்கோள் காட்டுகிறார்.

மதுரையில் நிகழ்ந்த பார்ப்பன இளைஞர் சங்க ஆண்டுவிழாவில், இனிமேல் தங்களுடைய வீட்டில் வட மொழியைத்தான் பேசவேண்டுமெனத் தீர்மானம்போட்ட னர். 10 இலட்ச ரூபாயில் சென்னையில் ஒரு வட மொழிப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தத் திட்டமிட் டுள்ளனர். உயர்நிலைப் பள்ளிகளில் 15 பேர்களுக்கு மேல் இருந்தால்தான், வடமொழியைக் கற்றுக்கொள்ள

 பழகினும் பார்ப்பாரைத் தீப்போல் ஒழுகு—திரிகடுகம்.

வேண்டுமென்று சென்னை அரசினர் உத்திரவு இட்ட பொழுது, பார்ப்பனர்தான் பதைபதைத்தனர்.

''ஆரியர்கள் என்றைக்கு இந்த நாட்டில் காலெடுத்து வைத்தார்களோ அன்றுமுதல் தமிழையும், தமிழரின் கலையையும், கலாச்சாரத்தையும் ஒழிப்பதிலேயே அவர்கள் கண்ணுங் கருத்துமாய் இருந்து வருகிறார்கள், இந்த ஆரிய சூழ்ச்சி கடந்த 2500 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது'' என மறைந்த மறைமலையடிகள் (இந்தி எதிர்ப்பு மாநாடு—17-7-48) வருந்திக் கூறியுள்ளார். தமிழர் வரலாற்றையும், வீரர்களையும் புகழ்வதில்லை. வரலாறு எழுதிய பார்ப்பன ஆசிரியர்கள் தமிழருடைய சிறப்பான வரலாற்று நிகழ்ச்சிகளுக்கெல்லாம் களங்கம் கற்பித்தே வந்துள்ளனர். தொல்காப்பியம், ஐந்திரவியாகரணம் என்ற வடநூலைப் பின்பற்றி எழுதியது என்றும், செங்குட்டுவனது வடஇந்தியப் படையெடுப்பைக் கட்டுக்கதை எனத்தள்ளிவிடலாம் என்றும், சத்தியநாதய்யர் என்ற அண்ணாமலைப் பல்கலைக் கழக வரலாற்றுப் பேராசிரியர் 'இந்திய வரலாறு' என்ற நூலில் (பக்கம் 151-189) கூறியுள்ளார். வீரத்திற்கு எடுத்துக் காட்டாக வீமனையும் இராமனையும் காட்டுவர். "களிறு எறிந்து பெயரும் காளையின் வீரத்தையும்", ''தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே'' என்ற மறக்குடி மகளிரையோ காட்டார். உடன் பிறந்தாரின் ஒற்றுமைக்கு இராமனையும் இலக்குமணனையும் அல்லாது, செங்குட்டுவன், இளங்கோ பற்றிச் செப்பார். இவர்கள் யாவரும் பேசுவது பகவத்கீதையின் பெருமையும், இராமராஜ்யச் சிறப்புமேயாகும். தமிழ்நாட்டு வீரர், வீரமகளிர் இவர்களின் பெயர்களைச் சூட்டிக்கொள்வதில்லை. தேவாரப் பிரபந்தங்களையும், தமிழ்ப்பண்களையும் பெரும்பாலும் பார்ப்பனர் மதிப்பதில்லை. உடல் வளர வேண்டும் என்பதற்காகத் தமிழ் படித்தவரே பார்ப்பனர். அவர்களின் உள்ளமும் உடலும் இறந்தொழிந்த வடமொழிக்கே உரிமையுடையன.

“பார்ப்பனருள் பெரும்பாலோர் மற்ற தமிழ் இன மக்களிடமிருந்து தம்மைத்தனியே பிரித்துக் காட்டுகின்றனர். தமிழ்மொழியைத் தமக்குரிய தாய்மொழியாகக் கொள்கின்றாரிலர் .......‘தமிழர்கள் தங்களுடையது என்று உரிமை பாராட்டுதற்குரிய பெருமையையோ, உயர்வையோ பெற்றிருந்தாரல்லர்’ என்று தயக்கமின்றிக் கூறமுற்பட்டார்.தமிழரிடத்து உள்ள நல்லன எல்லாம் சமஸ்கிருதத்தினிடமிருந்து தமிழர் கடனாகப்பெற்றவை என்பதும், தமிழரிடத்து உள்ள தீயன எல்லாம் தமிழர்க்கு உரியன என்பதும் அப் பார்ப்பனரின் கொள்கை,” என அறிஞர் ப. வே. மாணிக்க நாயகர் (ஆங்கிலச் சொற்பொழிவு –1917) குறிப்பிடுகிறார். உ. வே. சாமிநாதையர் போன்றோர் பார்ப்பனரின் நலத்திற்காகப் பெரும்பாடுபட்டனர். பரிமேலழகப் பார்ப்பனர் 110-ஆம் குறளுக்கு ‘பார்ப்பார் தபுதலும்’ என்ற உரையெழுதினமைக்கேற்ப, உ. வே சா. தாம் பதிப்பித்த புறநானூற்றில் 34-ஆம் பாடலில் ‘குரவர் தப்பிய கொடுமையோர்க்கு’ என்பதைப் ‘பார்ப்பார் தப்பிய கொடுமையோர்க்கு’ என பாடபேதம் காட்டாது மாற்றினார். மு.இராகவையங்கார், ஆரியர்கற்பியல்முறை, தமிழருக்குப் போதிக்கப்பட்டதென்றும், வேளிர் என்போர் தமிழரல்லர், வடநாட்டிலிருந்து வந்தவர்களென்றும், தொண்டைமானிளந்திரையன் துரோண மரபினரென்றும் ஆராய்ச்சிக்குப் பொருந்தாத ஆரியர் உயர்வுக் கதைகள் பல கட்டியவர். பரிமேலழகர் என்பார் ஆரிய நெறிதழுவி குறளுக்கு உரையெழுதியமை யாவரும் உணர்ந்ததே. “இந்தப் பார்ப்பனர்கள் தமிழ் மொழியைத் தங்களது வாழ்க்கை வளத்திற்காகவும், வசதிக்காகவும், பேசுகிறவர்களே ஒழிய அம்மொழியில் உள்ள அன்புக்காகவோ ஆர்வத்திற்காகவோ பேசுகிறவர்கள் அல்ல, உதாரணம் என்னவென்றால் இந்தப் பார்ப்பனர்கள் தங்களுடைய வைதீகக் காரியங்களிலும் தேவாதி பூசை பிரார்த்தனைகளிலும் தமிழை விலக்கிவைத்திருக்கிறவர்கள். (1937 சூன் 4 குடியரசில் சித்திரபுத்திரன் என்ற புனைப் பெயரில் பெரியார் குறிப்பிடுகிறார்).

ஆரியரது பழக்க வழக்கம், பண்பாடு, மொழி இவைகளை முற்றிலும் பின்பற்றுபவர் பார்ப்பனர். தமிழரது

பண்பாட்டை இவர்கள்பின்பற்றுவதில்லை.'பார்ப்பனர்கள் தமிழர்கள் என கூறிக்கோள்ள உரிமையற்றவர்கள்' (பெரியார், 1939-ஜுன் 4, குடியரசு) வெளிநாட்டிலிருந்து தமிழகத்தில் குடியேறிய, இத்தாலி, பிரான்சு, இங்கிலாந்து போன்ற நாட்டவர்களைப் போன்றே வரலாற்றுக்காலம் முதலே தமிழ் மன்னர்களின் பகைநாடாக இருந்துவரும் வடநாட்டிலிருந்து தமிழகத்தில் குடியேறி வாழ்ந்துவரும் பார்ப்பனரும் அந்நியர்களே.

"அந்தக் காலத்தில் இங்கிலாந்தில் ஆதிக்கக்காரர் களாக வாழ்ந்த, நார்மானியர்களைப் (Normans) போலவே, தென்னிந்தியாவின் பல பகுதிகளில் பார்ப் பனர்கள் இன்று செல்வாக்குப் பெற்றுள்ளனர். அரசியல், மத, படையெடுப்புகள்-என்ற உரிமைகள் மூலம் அவர்கள் அங்கேவாழ்கிறார்கள் ...எனினும்இன்னும்பார்ப்பனர்கள் ஒருவிதத்தில் அன்னியர்களே! "சமூகம் பல சாதிகளாகப் பகுக்கப்பட்டு பார்ப்பனர்களுடைய அரை தெய்வாம்சத் தலைமையில் இருக்கவேண்டும்" என்ற அவர்களுடைய இலட்சியத்தின் முதற் கொள்கைகளைத் திராவிடர்கள் ஒருபோதும் முழுதும், ஏற்றுக்கொண்டதே இல்லை"

## பைந்தமிழரல்லர் பார்ப்பனர்

பன்னீர்ச்செல்வம் முடிவு

''சமஸ்கிருதமே நம் போதுமோழியாகிய தமிழ் மோழியைவிட மேன்மைப்பட்டதென்றும், அது ஒரு தெய்வீகமோழி என்றும், அம் மோழியே கடவுள் வணக் கத்திற்கும் மற்றுமுள்ள அவர்கள் சடங்குகளுக்கும் போருத்தமானதென்றும், அதை இழிபடுத்திப் பேசுபவர் கள், எவ்விதத்தில் தமிழர்களேன்று அழைக்கப்போருத்த முள்ளவர்கள் என்று எனக்கு விளங்கவில்லை. ஆகவே பார்ப்பனர்கள்தமிழராகாரேன்று சோல்வது மிகையாகாது (வேலூரில் நடைபெற்ற சென்னை மாநிலத் தமிழர் மாநாட்டின்தலைமையுரை. 17-3-1940 குடியரசு.

என எல். டி. பேர்னட் ('The heart of india') தெளிவாக எழுதியுள்ளார்.

"கடவுளின் தனி அன்பிற்கும் ஆதரவிற்கும் உரியவர்களாகத் தங்களைக் கருதிக்கொண்டு யூதர்கள் பிறநாட்டவருடன் கல்லாது எட்டிநின்றது யூதப்பகைக்குக் காரணம் நகத்தில் அழுக்குப்படாத வேலைகளை எல்லாம் பெரும்பாலும் யூதர்களே பிடித்துக்கொண்டார்கள். நெக்கு முறியும்படி வியர்வை நிலத்தில் விழ பாடுபடவேண்டிய தொழில்களே நாட்டு மக்களுக்கு மிஞ்சின. மாடமாளிகைகள் நிறைந்த பட்டினங்களும் நகரங்களும் யூதர்மயமாயின, இட்லர் ஆட்சியில் 1939-ஆம் ஆண்டு ஜெர்மனியில் யூதர்கள் விரட்டப்பட்டதுபற்றி, பிரிட்டிஷ் அரசியல் தலைவர் லாயிட் ஜார்ஜ் குறிப்பிடுவதை, தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களின் இன்றைய நிலையோடு ஒப்பிடுவது உண்மை அறிவதற்கு ஓரளவு துணைபுரியும்.

## பார்ப்பனர் அன்று

உச்சியிலே குடுமி; உடலிலே பூணூல்; உள்ளத்தில் நினைப்பது ஒன்று; உரைப்பது வேறாக இருக்கும்; எள்ளத்தனையும் குறையாத, பளபளக்கும் பருத்த வயிறு; மூலக்கச்சம் வைத்துக் கட்டியிருப்பர். தர்ப்பை ஏந்திய கை தார்வேந்தரை ஆட்டிப் படைக்கும்; பஞ்சாங்கம் ஏந்திய கரம் பாமரரை அடிமைப்படுத்தும், அரசரின் துணைகொண்டு, வேதபாடசாலை நிறுவுவர். மழைக்காலத்துத் தவளைபோல் பொருள் புரியா மந்திரங்களை உருப் போடுவர். ("வேதங்களை அர்த்தம் புரிந்து கொள்ளாது மனப் பாடம் செய்து, மழுங்கிப்போன அறிவுடையவர்களுக்கு உலக வழக்குகளில் திறமையிருக்காது"—கதிரேசன் (செட்டியார்) சுக்கிர நீதி) வேதத்திற்கு விளக்கம் தரும் பிராமணராக, அர்ச்சகராகக் கோயிலில் ஏகபோக ஆட்சி செய்வர். தமிழ்கற்ற வில்லிபுத்தூரார் போன்றோர் பாரதத்தை மொழிபெயர்ப்பர். கம்பர், 'இராமாயணம்' எழுதினதால் பார்ப்பனரால் 'கவிச்சக்ரவர்த்தி' ஆக்கப்பட்டார்.

கோயில் பல கட்டச்செய்வர், குருட்டு எண்ணம் பரப்பி கொள்ளை கொள்வர் செல்வத்தை கீதைமூலம் வர்ணாச்சிரமம் பரப்ப 'கிருட்டிண அவதாரங்கள் பல உண்டு.

காலம் கடக்கிறது; மன்னர் ஆட்சி வீழ்கிறது; மக்களாட்சி மலர்கிறது; மதவாதிகளின் மமதைஒழிகிறது; அறியாமை இருள் அகல்கிறது; அகிலமெங்கும் அறிவொளி பரவுகிறது; தனியுடைமைத் தோட்டம் பொதுவுடைமைப் பூங்காவாக மாறுகிறது; உழைப்பவர் உலகை ஆள்கிறார்; வல்லரசுகள் குடியேற்ற நாடுகளை விட்டு வெளியேறுகின்றன; சமீன்தார்கள் செல்வாக்கிழந்து காட்சியளிக்கின்றனர்; நவீன போக்குவரத்து சாதனங்களால் நீள்வையம் சுருங்கிவிட்டது; நிலவை எட்டிப் பிடிக்க முயல்கிறது அறிவுலகம்; பாரெல்லாம் மாறுதலைக் காணுகிறோம். ஆனால் மாறினார்களா பார்ப்பனர்கள் ?

## பார்ப்பனர் இன்று:

தலைப்பாகைக்கு அடியிலுள்ள குடுமி; சட்டையால் மறைக்கப்பட்ட பூணூல்; உதட்டளவில்பூணூலை அறுத்து விட்டேன் என்று பேசுவது; உள்ளத்தில் பூசுரராய் வாழ்வது; மினுமினுப்புக் குறையாத மேனி; பெருத்த வயிற்றை இறுக்கிய சூட்டு. பேனா பிடித்த கரம் அரசியல் உலகில் திருப்பத்தை உண்டாக்குகிறது; சட்டம் பிடித்த மற்றொரு கை பஞ்சமர், சூத்திரர் போன்றோரின் இழிநிலை மாறா வண்ணம் சட்டம் செய்கிறது. அரசியலாரின் உதவி கொண்டு உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் பல ஏற்படுத்தி, சொன்னதைச் சொல்லும் கிளியினைப்போல், படித்தவற்றைப் பரீட்சையில் வாந்தி எடுத்து பட்டங்கள் பல பெற்ற அய்யர், அய்யங்கார், சர்மா, சாஸ்திரிகள் ஆபீசர்களாக அலுவலகத் துறையில் ஆட்சி புரிகின்றனர். தமிழ் கற்ற பார்ப்பனர் 'முத்திராராட்சசம்', 'சாகுந்தலம்' போன்ற வடநூல்களை மொழிபெயர்க்கின்றனர். 'கம்பர் தரும் காட்சி எழுதியவர்கள் 'ரசிகமணி' ஆக்கப்படுகிறார்கள். அரசியல் இயக்கங்களை உண்டாக்கிபிற்போக்கு

---

பம்மன்-கீ-மாரோ - வடநாட்டுப் பழமொழி.

எண்ணங்களைப் பரப்பி, அரசியலில் செல்வாக்கும் தலைமைப் பதவியும் பெறுகிறார்கள். 'கண்ணன் காட்டிய வழி' 'பஜகோவிந்தம்' போன்ற கட்டுரைகளின் மூலம் வைதீக நெறி பரப்ப 'கல்கி' அவதாரம் எடுத்திருப்போரும் உண்டு.

## மாறிவிட்டனரா பார்ப்பனர் ?

பூணூலை அறுத்தெறிந்துவிட்டு, கிராப்பு வைத்துக் கொண்டு, 'கடல் கடந்து செல்லக் கூடாது' என்று வேதம் விதித்த கட்டளையை மீறி அமெரிக்காவிற்கும், ஐரோப்பாவிற்கும் செல்லும் படித்த பார்ப்பனரைப் பார்க்கலாம். பெண்களை அடிமைகளாக நடத்திய பார்ப்பனர் இன்று கல்வியையும், உரிமையையும் அள்ளிவழங்குகின்றனர். பார்ப்பனப் பெண்களால் நடைபெறும் 'பாங்கு'சளும் உண்டு. மொட்டையடித்து முக்காடிட்டு மூலையில் உட்காரவேண்டிய 'ருக்மணி அருண்டேல்கள்' அடையாற்றில் கலாச்சத்திரம் நிறுவி, அகில உலக முழுவதும் பவனி வருவதையும், வெள்ளையுடை உடுத்த வேண்டிய சந்தியாக்கள் பட்டாடை பல உடுத்தி மின்னும் சினிமா நட்சத்திரமாக விளங்குவதையும் காணலாம். சாதிகளைக் காப்பதே முதல் வேலையாகக் கொண்ட ஆச்சாரியார் காந்தியின் மகனுக்குப் பெண் கொடுத்தார். இது போல் இன்னும் சில உண்டு.

“ஆங்கிலக் கல்வி கற்றுப் பெரிய உத்தியோகங்களிலே உள்ள பார்ப்பனர் தங்கள் சாதி ஆச்சாரத்திலும் வழுவியவர்களாகவே, மேலுக்குக் கருதப்படுவார்கள். அந்தரங்கத்தில் அவர்கள் பார்ப்பனராகவே இருப்பார்கள்” — என 'ஆர்தர் மைல்ஸ்' என்ற ஆங்கில நூலாசிரியர் தாம் எழுதிய “LAND OF THE LINGHAM” என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

பார்ப்பனர்கள் உயர்சாதிச் சின்னங்களாம் பூணூலையும், குடுமியையும் மறைக்கிறாரே தவிர, மறந்துவிடவில்லை. ஆண்டிற்கு ஒருமுறை 'ஆவணி அவிட்டத்'தன்று புதுப்பூணூல் அணிந்துகொள்ளத்தான் செய்கின்றனர்.

"உச்சுக்குடுமியைத் தட்டிவிட்டுக் கொள்ளுங்கள்; அது நேர்கோணத்தில் நிமிர்ந்து நிற்கட்டும்! முப்புரிநூலையும் யாவர்க்கும் தெரிந்து கொள்ளும்படி அணிந்து கொள்ளுங்கள்" என்று மதுரையில் நடந்த பார்ப்பனர் கூட்டத்தில் மேற்குலத்தவர் என்ற ஆணவத்தால் இன்றும் பேசுகின்றனர். டி. எஸ். எஸ் ராஜம் போன்ற பார்ப்பனர் மேல்நாடு சென்று வந்ததற்காகப் பிராயச்சித்தம் செய்து கொள்கின்றனர். "கலப்பு மணத்தால் சாதிகள் ஒழியும்; சாதிகளை ஒழிக்க கலப்பு மணத்தை ஆதரியுங்கள்" என்று காந்தியின் சம்பந்தி ஆச்சாரியார் கூறவில்லை. இன்னும் சாதியைக் காப்பாற்றவே வேண்டுகிறார். ஆச்சாரியார் தன் மகளை காந்தியின் மகனுக்கு மனைவியாக்கிய திருமணத்தால் அனைத்து இந்திய அரசியலில் தனது செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டாரே ஒழிய, சாதி ஒழிப்பிற்குக் கலப்புத் திருமணத்தைப் பயன் படுத்தினாரில்லை.

## பழமையின் பாதுகாவலரே பார்ப்பனர்

### விவேகானந்தர் விளக்கம்.

'நம்நாடு, பிராமணர்களை நம்பித்தான் பாதாளத்தில் வீழ்ந்துவிட்டது. அவர்கள் தம் கொள்கைகளைத் தமிழ்நாட்டில் பரவவைக்க வேண்டுமென்று எண்ணுகிறவர்கள். அவர்களை நம்பி மோசம் போகக்கூடாது. முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாய் இருப்பவர்கள் பிராமணர்களே!"

112537

.....................

"முன்னேற்றத்திற்கு எப்பொழுதும் தடையாக உள்ள புரோகிதக் கூட்டத்தைப் புறக்கணியுங்கள்; அவர்கள் உள்ளத்தை மாற்றமுடியாது. அவர்கள் உள்ளம் ஒருபோதும் விரியாது; அவர்கள் சென்ற பல நூற்றாண்டுகளாக இருந்துவரும் மூட நம்பிக்கை, கொடுமை இவற்றினின்றும் தோன்றியவர்கள். அதனால் முதலில் புரோகிதர்களையே சமூகத்திலிருந்து களைந்து எறியுங்கள்; வாருங்கள்; மனிதராகுங்கள்."

மாறிவரும் காலப்போக்கிற்கேற்ப அவனவன் வாழ்க்கை வசதிக்காக தனிப்பட்ட பார்ப்பனர் குறித்த காரியத்தை நிறைவேற்றுவதற்காக மாறியதுபோல் நடிக்கிறாரே தவிர உண்மையாகப் பார்ப்பனர் மாறவில்லை, தந்நலத்திற்காகப் பார்ப்பனர் மாறுவதுபோல் காணப்படுகின்றனர். இதனால் அவர்கள் நலம் பெறுகிறார்களே தவிர, திராவிட இனத்திற்கு எள்ளளவும் பயனில்லை. பொதுவாகப் பார்ப்பன சமுதாயத்தில் எந்த விதமான மாறுதலும் இல்லை. 'சிறுத்தை தன் புள்ளியை மாற்றினாலும் மாற்றிக் கொள்ளும்; எதியோபியன்தன் நிறத்தை மாற்றினாலும் மாற்றிக்கோள்வான் ஆனால் ஒரு பார்ப்பனன் தன் கோள்கையை மாற்றிக்கோள்ளவே மாட்டான்'-என்ற டி. எம். நாயரின் கூற்று மிகவும் பொருத்தமானதே.

---

## பண்பை மாற்றா பார்ப்பனர்!

### அன்று திராவிடநாடு!

" ஆரியன்கூத்து காரியமின்றி நடவாது இந்து அரசர்கள் சிலர் சுதந்திரமிழந்தனரே தவிர, ஆரியன் வாழ்வக்குக் குறை எதுவும் வரவில்லை. யார் அழிந்தாலென்ன; எத்தனை அகழிகளிலே தலைகள் உருண்டாலென்ன; கோட்டைகள் தூளானாலென்ன; தமது வாழ்வக்கு வழி கிடைத்தால் போதும் என்ற எண்ணம் ஆரியன் மாற்றமுடியாத சுபாவம். சிறுத்தையின் புள்ளிமாறினாலும், இந்தச் சீலரின் வாழ்வுப்பற்றுமாறாது. பாம்பு சீறிட மறந்தாலும் இந்தப் பண்டாக்கள் தம் பண்பை மறவார். — 1942 - திராவிடநாடு.

உலகிலேயே, தமது பண்டைய இயல்பை மாற்றிக் கொள்ள, துளியும் சம்மதிக்காது, அத்தகைய பழைய ஏற்பாடு மகாபுனிதமானது என்று மமதையுடன் கூறிக்கொள்வதிலே, ஆரியரும் யூதரும் முன்னணி வீரர்கள். எனவே இவ்விரு இனமும், தத்தம் இன இயல்பைத் துளியும் மாற்றிக் கொள்ளாது இருப்பதற்கான முறைகளைச் சர்வ ஜாக்கிரதையுடன் பாதுகாத்து வருகின்றன. — 30-5-43 – திராவிடநாடு

---

 நமக்கிருக்கும் முதல் எதிரி ஆரியன்தான் - எழுச்சி முரசு.

எந்தப் பார்ப்பனர் கழகமும், "இந்நாட்டுச் சமுதாயத்திற்குத் தீங்கிழைத்து விட்டோம், இனி நாங்கள் திருந்தி விடுகிறோம்" என்று இதுவரையில் கூறவுமில்லை, தவறை உணரவுமில்லை. 'வர்ணாஸ்' சிரமத்தைப் புகுத்தி உங்கள் வாழ்க்கையைக் கொலை செய்துவிட்டோம். குதிரை கீழே தள்ளியதுமில்லாமல் குழியையும் பறித்ததுபோல, எண்ணத் தொலையாத சடங்குகளால் உங்கள் பொருளைக் கொள்ளை கொண்டோம். ஆனால் இவைகளுக்கு எல்லாம் ஆதாரம் மனுவில் இல்லை. புண்ணியாவாசனம், கருமாதி, உபநயனம், என்றெல்லாம் கூறி உங்களை வஞ்சித்துப் பணம் பறித்தோம் இனி அவ்விதம் செய்யமாட்டோம்" என்று எந்தப் புரோகிதக் கூட்டமும் கூறவில்லை. பார்ப்பனப் புரோகிதர் இன்னும் பித்தலாட்டம் செய்துகொண்டுதான் இருக்கின்றனர். ஆண்டவனின் தரகனாகத்தான் அர்ச்சகப் பார்ப்பனர் விளங்குகின்றனர்.

இந்நிலையில் திருந்திவிட்டதாகப் பார்ப்பனரை நினைத்து, திராவிடர் என்ற இனப்பெயரைச் சூட்டிக் கொண்டுள்ள கழகங்களில் சேர்த்துக்கொள்வது இனத்திற்கே செய்யும் மாபெரும் துரோகமாகும். பார்ப்பனர் திருந்திவிட்டனர் என்றெல்லாம் அவர்களுக்காகப் பரிந்து பேசுபவர்களுக்கு "இவ்வளவு கொடுமையைச் செய்தும், அந்த இனம் (பார்ப்பனர்) இன்றுவரை, வாட்ட வருத்தமின்றி வாழுகிறதே, அதுதான் எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. குச்சுக்காரிக்கு நாட்டிலே இடமிருப்பதே கேவலம். அவளுக்குக் கோயில்கட்டி, பூசை செய்ய, அர்ப்பரசிகள் நியமிக்கப்பட்டால், அது, ஆச்சரியத்திலும் ஆச்சரியமல்லவா? இந்த அக்கிரமத்திற்குச் சிலர் உடன்பட மறுக்கும்போது, அந்தக் குச்சுக்காரி இது தகுமா, முறையா என்று கேட்பது அதைவிட ஆச்சரியமல்லவா? அதுபோல்தான் இருக்கிறது ஆரிய இனத்துக்காகப் பரிந்து பேசும் உமது வாதம்!" என்ற திராவிடநாடு ('நன்னிலம் நண்பருக்கு' 7—11—1943) கூற்றினை நினைவு படுத்துகிறோம் பார்ப்பனராகப் பிறந்துவிட்ட எவரும் பூணூ

லையும்; உச்சுக் குடுமியையும் அறுத்தெறிந்துவிட்டாலும் திராவிடராக முடியாது; கூடாது. ஏனென்றால் திராவிடராகப் பிறந்துவிட்ட யாரும், அவர்கள் பூணூல் அணிந்துள்ள விஸ்வகர்மராகவோ, செட்டியாராகவோ இருந்தாலும் சரி உறுதியாக அவர்கள் எல்லாம் 'உயர்சாதிக்காரராக" 'பிராமணராக' ஆகமுடியாது. "வாயில்-நாக்கில்-குற்றம் இருந்தால் ஒழிய வேம்பு இனிக்காது தேன் கசக்காது. பிறவியில் மாறுதல் இருந்தால் ஒழிய புலி புல்லைத் தின்னாது. ஆடு மனிதனைத் தின்னாது. அது போல வாக்கும் பார்ப்பனர் தன்மை" என பிறவி உயர்சாதிக்காரராம் பார்ப்பனர் பற்றித் **தந்தை பெரியார்** அழகாகக் கூறுகிறார்.

பொருள் இருந்தால் தொழிலாளி - முதலாளி ஆக முடியும்; ஆனால் பூணூல் குடுமி வைத்துக்கொண்டாலும் ஆரியருக்குப் பணத்தை அள்ளிக் கொடுத்தாலும் திராவிடர் ஆரியராக முடியாது. நல்லவரென நடிப்பதில் கைதேர்ந்த பார்ப்பனரை நம்முடன் சேர்த்துக்கொள்வது ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாயை, ஆட்டு மந்தையிலே சேர்த்துக் கொள்வதை ஒக்கும். என்றாவது ஒருநாள் ஓநாயின் வேடம் கலையத்தான் செய்யும்; விபரீதங்கள் விளையத்தான் செய்யும். குளிரால் விரைத்து சுருண்டு

---

## சாதி ஒழிய பார்ப்பனர் ஒழியவேண்டும்

**விஞ்ஞானியின் கூற்று.**

**"இன்றைய சமுதாய அமைப்பில் பார்ப்பனர்களுக்கு இருந்துவரும் உயர்ந்தநிலை, மதத்தின்பேரால் அவர்கள் அனுபவித்துவரும் உயர்நிலை தகர்த்தெறியப்படாதவரையில் இந்தியாவிலிருந்து இந்தச் சாதிமுறையை ஒழிக்கமுடியாது. மதச்சடங்குகளில் பார்ப்பனர்களுக்கு இருந்துவரும் தனி உரிமை ஒழிக்கப்படவேண்டும்",**

டாக்டர் அய்யப்பன்

(10-1-58 இல் சென்னை விஞ்ஞானிகள் மாநாட்டுச் சொற்பொழிவு)

---

கிடக்கும் பாம்பைச் செத்துவிட்டது என்றுஎண்ணி வீட்டிற்குள் கொண்டு வருவதும், நீருபூத்திருக்கும் நெருப்பை வைக்கோல் போருக்கு அருகில் வைப்பதும், மாறாப் பார்ப்பனரைத் திராவிடரோடு சேர்த்துக் கொள்வதும் ஒரே விளைவைத்தான் கொடுக்கும். நாகம் தனது நச்சுப் பல்லால் நம்மைத் தீண்டத்தான் செய்யும், நெருப்பு வைக்கோலை எரிக்கத்தான் செய்யும்; பார்ப்பனர் நம்மைக் கெடுக்கத்தான் செய்வர். பகையாளிக் குடியை உறவாடிக் கெடுப்பதுடன், நண்பனாக இருந்து நயவஞ்சகச் செயல் புரிவதில் நிபுணர்கள் இப் பார்ப்பனர்கள். போராட்ட காலங்களில் மறைந்துகொள்ளும் 'இராமன்களே' இப் பார்ப்பனர்கள். இத்தகையவர்களை நம்முடன் சேர்த்துக்கொள்வதானது யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொண்டது போல் நம்மினத்திற்கு நாமே அழிவினைச் செய்துகொண்டவராவோம். ஓட்டிற்காக இவர்களைச் சேர்த்துக் கோண்டால் இன நலனுக்கு வேட்டுவைத்தவர்கள் ஆவோம்.

## பார்ப்பனர் சூழ்ச்சியே சாதிப்பிரிவுகள்

### மறைமலையடிகளின் ஆராய்ச்சிஉரை.

"இவ் ஆரியப் பார்ப்பனர் ஏனைய வகுப்பினர் எல்லோரும் ஒன்று சேர்ந்துவிடாதபடி அவர்கட்குள் பல்வேறு சமயப்பிரிவு, சாதிப்பிரிவுகளை உண்டாக்கி அவ்வொவ்வொரு பிரிவினரும் தத்தம் சமயமே, தத்தம் சாதியே உயர்ந்ததென்று சொல்லி ஒருவரையொருவர் பகைத்துப் போராடவைத்து, அப் போராட்டத்துக்கு இடமாக இராமன் கதை, கண்ணன் கதை, கந்தன் கதை, விநாயகன் கதை, காளி கதை முதலிய பலவேறு கட்டுக்கதைகளைத் தமது வடமொழியில் உண்டாக்கி வைத்து அவற்றை இராமாயணம், பாரதம், பாகவதம், காந்தம் முதலிய புராணங்களாக உயர்த்தி வழங்கி அவை தம்மை மற்றையெல்லா வகுப்பினரும் குருட்டு நம்பிக்கையால் விடாப்பிடியாய்ப் பிடித்துக் கொள்ளும்படிச் செய்து விட்டார்கள்."

--அறிவுரைக்கோத்து.

இதைவிடப் பெரிய இமாலயத் தவறு, பார்ப்பனரைக்கொண்டு சாதியை ஒழிப்பது என்பது. "சாதிகள் பிறந்ததற்கே காரணம் பார்ப்பனர்கள்தான்; பார்ப்பனர்கள் கண்டு பிடித்ததுதான் சாதி" என எம். ஏ. ஜாரிங் 'இந்துக்களும் சாதிகளும்' என்ற நூலில் கூறுகிறார். சாதியைப்படைத்தவர் மட்டுமல்ல பார்ப்பனர், இந்த அமைப்பிலிருந்து பலன்பல பெற்றவர். பெறுகின்றனர், பெற முயற்சிப்பவர்.

தள்ளாத வயதிலும் கொல்லாமை சிறந்ததெனக் கூற முன்வராது, புலி! 1958-லும் 'சாதிகள் ஒழிக' எனச் சொல்லார் பார்பனர். "சமூக ஏற்பாட்டை மாற்றாமல் எப்படிப்பட்ட தர்மவிபரீதத்தைச் செய்தாலும் பார்ப்பனர்கள் எதிர்ப்பதில்லை சமூதாயத்தைத் திருத்த முயன்ற ஒவ்வொரு சீர்திருத்தச் செயலையும். பார்ப்பனர்கள் எதிர்த்தார்கள். பார்ப்பனர்கள் சமூக வேறுபாடுகளை நீக்க முயற்சித்தார்கள் என்று கூறுவது தவறு. வேறுபவடுகளைப் பலப்படுத்தி முட்டுக்கட்டை கொடுக்கத்தான் (முயற்சித்தார்கள்" என்கிறார் நேரு. RECENT ESSAYS AND WRITINGS PAGE 126.)

மண் குதிரையை நம்பியாவது ஆற்றைக்கடந்து, அக்கரையை அடைந்துவிடலாம். ஆனால், முடியவே முடியாது பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொண்டு சாதியை ஒழிப்பதென்பது இதைத்தான் "சாதி ஒழிந்தால் பார்ப்பனர் சமூகத்தின் உயர்விற்குப் பேராபத்து உண்டாகும் எனபதை அநேகர் உணர்வதில்லை. எனவே பார்ப்பனர் சமூகத்தின் சக்தியையும் செல்வாக்கையும் ஒழிக்கக் கூடிய சாதி ஒழிப்பு இயக்கத்தைப் பார்ப்பனர்கள் ஆதரிப்பார்கள் என்று எதிர் பார்க்கமுடியுமா?" என அம்பேத்கார் கூறுகிறார். மேலும் நம்மிடையே உள்ளதுபோன்று இனத்தை, மொழியைக் காட்டிக்கொடுத்துப் பட்டம், பதவிபெறும் துரோகிகள் பார்ப்பானிடத்து இல்லவே இல்லை.



பார்ப்பான் பிறவிப் பெருமை பேசுவான்.

## ஏது தேவை? இன்று எங்கே அந்த அறிவு ?

"சமுதாயத் துறையில் பார்ப்பனியத்துக்கு இன்றுள்ள செல்வாக்கு அழிக்கப்பட்டாலொழிய, அரசியலில் உண்மைத் தமிழர் எவரும் தலைதூக்க முடியாது. எப்படியேனும் தேர்தலில் வெற்றி பெற வேண்டும், அரசியலைக் கைப்பற்றவேண்டும் என்று கருதும்நேயர்கள் இக்கருத்தை மறுத்துரைப்பதை நாமறிவோம், அவர்கள் பாதை வகுத்துக்கொள்ளா முன்னம், வண்டியேறும் பேர்வழிகள், பிறகு வண்டி காடு, மேடு சுற்றி, இருசு வளைந்து, குடை கவிழ்ந்து போவதைக்கண்டு கலங்குவர், நாமோ பாதை வகுத்த பிறகே வண்டியைப் பூட்டவேண்டும் என்ற கருத்துடன் தமிழர் இயக்கம் பணியாற்ற வேண்டும் என்று கூறுகிறோம்......" "பல்லிளித்துப் பசப்பிப் பாகு மொழி பேசியும் எப்படியேனும் 'ஓட்'பெற்று ஊராள்வோராகி; பிறகு கிட்டிய பதவி போகாதிருக்க பார்ப்பனதாசராக இருக்கும் நிலை தேவையா, தீவிரமான கொள்கையைப் பலமாகப் பிரச்சாரம் செய்து, செயலிலே காட்டி, செந்தமிழர் படை திரட்டி, சனாதனக் கோட்டையைத் தாக்கித் தகர்த்து, சமதர்மமும் சுயமரியாதையும் மணக்கும் தமிழர் ஆட்சியை நிலைநாட்டும் செயல் தேவையா என்பதைத் தோழர்கள் தீர்மானித்துக்கொள்ளவேண்டும், தமிழருக்குப் பன்னெடுங்காலத்திற்கு முன்பிருந்தே ஏற்பட்டுள்ள இன்னலும், இழிவும் துடைக்கப்பட்டு, புதுவாழ்வு பெற அச்சம், தயை, தாட்சண்யம் இன்றி ஆரியத்தைக்கண்டித்து அழித்து ஒழிக்கவேண்டும். அதற்கு நெஞ்சுறுதி மிகமிகத் தேவை. நிலைகுலையாத மனப்பாங்கு அதைவிட அவசியம்; இடுக்கண் விளைந்தகாலை விம்மாத விழியும், எதிர்ப்புக் கூட்டத்தாரின் எக்காளத்தைக் கேட்டுப் பதராத உள்ளமும் தேவை. நம்முன் நிற்கும் வேலை அவ்வளவு பெரிது! இத்துணை நெஞ்சுறுதி தேவை சொந்த வியவகாரமல்ல, சுயநலச்சேவை அல்ல நமக்கிருக்கும் வேலை, இன எழுச்சி யெனும் இலட்சியம், அதனைச் சுலபத்திலோ, சுற்று முற்றும் பார்த்துக்கொண்டோ செய்யமுடியாது,"

**'தோல்வி-ஆனால்' திராவிடநாடு** தலையங்கம் 13-6-43

'ஆரியமாயையில்' வீழ்ந்து, பார்ப்பனர் அமைத்த 'பலிபீடம் நோக்கி' செல்லுபவர்கள், 'தஞ்சையின் வீழ்ச்சியை' மறந்துவிடவேண்டாம். பார்ப்பனரைக் கொண்டு சாதியை ஒழிப்பதென்பது அமெரிக்காவைக்கொண்டு முதலாளித்துவத்தை ஒழிப்பது போன்றதாகும். இதை சாதி ஒழிப்புப் போராட்டம் நன்கு விளக்கும்.

---

# பார்ப்பானே வெளியேறு

பிரம்மாவின் முகத்திலிருந்து பிறந்தவராம் 'பிராமணர்', புகைவண்டியில் முன்கூட்டியே வேண்டிய இடத்தை ஒதுக்கி வைப்பதுபோல சனாதனதர்ம சமுதாயத்தில் பார்ப்பனருக்குத் தலைமை இடம் ஒதுக்கிவைக்கப் பட்டுள்ளது என்பதன் அடையாளச்சீட்டே 'பிராமணாள்'. "பிறவியின் காரணமாகப் பார்ப்பன சாதியில் பிறந்த அயோக்கியன் (Scoundrel) ஒருவனும் தனது புனிதத்தன்மை கெடாது உயர்ந்து வாழ்கிறான்; தாழ்ந்த தெருப்பெருக்கும்குலத்தில் உதித்தபெருந்தன்மைவாய்ந்த ஒருவன், பிறவியின் காரணமாகத் தனது வாழ்நாள் முழுதும் விலங்கு பூட்டப்பட்டு கொடுமைக்கு ஆளாகிறான்,"

---

**காடிக்கழகம் கண்டோரின் கவனத்திற்கு!**

பழமை இருக்கிறதே அது காடி போன்றது! அதைப் பருகிய போதையால் உளறிக்கொண்டு கிடக்கும் கூட்டத்துக்கு அது பொருத்தமான பெயர்தான்! மேலும் ஓர் பழமொழி உண்டல்லவா, "எல்லாம் சொல்லுமாம் பல்லி, காடிப்பானையிலே விழுமாம்" என்று அதேபோல, முன்பு நம்முடன் சேர்ந்து, ஆரியத்தை அழிக்கவேண்டும், தமிழ் வீரியத்தை வளர்க்க வேண்டும். பார்ப்பனப் புரட்டைப் பொசுக்க வேண்டும், அதைப் பெரியார் இப்படி, இப்படிச் செய்யவேண்டும் என்று பேசிக் கொண்டிருந்துவிட்டு, இன்று அதே ஆரியத்திலே போய் வீழ்ந்துவிட்ட வீணர்களின் கூட்டத்திற்கு வேறென்ன பெயரிடுவது? — 21.3.43 திராவிடநாடு.

---

என பேராசிரியர் ஜே. டபிள்யூ. கிரிகரி கூறுகிறார். எத்தகைய இழிகுணம் படைத்தவராக இருந்தாலும் பிறந்து விட்டனர் பார்ப்பனராக என்றால் அவர்கள் உயர்ந்தவர்கள்தான். அறிவொழுக்கங்களில் சிறந்த திராவிடர்கள் கூட அவர்களை 'பிராமணாள்', 'அய்யர்', 'சாமி' என்றுதான் மரியாதையாகக் கூப்பிட வேண்டுமாம்! திராவிட சமுதாயத்தின் பெருமையை அழிக்க, செல்வத்தைச் சுரண்டிக் கொழுக்க பிறப்பைப் பயன்படுத்திக் கொண்டனர் பார்ப்பனர்." இது மிகப்பெரிய தவறு, பிராமண தர்மத்திற்குரியது பிறப்பன்று; சமஸ்காரமன்று; வேதம் ஓதுதல் அன்று; பரம்பரையன்று; நற்றவ ஒழுக்கமே ஆகும்" என்று திரு. வி. க. ('மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்'—பக்கம் 108 ) கூறுகிறார்.

சமுதாய நிலையில் உயர்ந்த இடத்தில் பார்ப்பனர் உள்ளனர் என்பதை அறிவிக்கும் சொல்லே 'பிராமணாள்'. மக்களை ஆட்சிபுரிய மன்னன் கையில் உள்ள செங்கோல் போன்று இந்நாட்டு சமுதாயத்தையே தமக்கு அடிமையாகக்கொண்டு ஆட்சிபுரிய உதவுவதே, 'பிராமணாள்' 'சமுதாயத் தலைவர் தாங்கள் என்பதைக்காட்ட பார்ப்பனர் அணிந்துள்ள மணி முடியே 'பிராமணாள்' பிராமணாள்' என்று உண்டிச்சாலை போன்ற பொதுவான இடத்தில் கொட்டை எழுத்தில் எழுதி பார்ப்பனர் தொங்கவிட்டிருக்கின்றனர் என்றால், மானத்திற்கு மதிப்பளித்த, தமிழர் பரம்பரையை, 'வேசிமக்கள்' என பழித்து போரிலே புறங்காட்டா வீரரைக்கொண்ட புறநானூற்று மரபினைத் 'தோற்றோடியவர்' என்ற அவச்சொல்லைவீசி, 'சூத்திரர்' என்று நம்மையெல்லாம் இழித்துக் கூறுகின்றனர் என்றுதானே பொருள்.

ஆணிவேரை அடியோடு பிடுங்கிவிட்டால் சாதிஎன்னும் மரத்தின் கிளைகள் அதிகநாள்நிலைக்காது. 'பிராமணாள்' என்ற உயர்சாதியை ஒழித்து விட்டால் மற்ற சாதிகள் தானே ஒழியும். ஆடிக் காற்றில் அம்மியே பறக்கும் பொழுது இலவம்பஞ்சு என்ன ஆகும்? சாதி ஒழிப்புச்

சூராவளியில் பார்ப்பனரே ஒழியும் பொழுது மற்றவர் என்ன செய்ய முடியும்! கீழ்சாதியாய் சேரியில் வாழ எவரும் விரும்பார், ஆனால் மேல்சாதிக்காரராய் 'அக்கிரகாரத்தில்' வாழும் உரிமையை இழக்க ஒப்பார் பார்ப்பனர், எனவே சாதி ஒழிந்த சமுதாயம்காண விழையும் பெரியார் சில ஆண்டுகளுக்கு முன்பு 'பிராமணாள்' அழிப்புப் போரைத் தொடங்கினார், அச்சொல் மீண்டும் தோன்றியது அலுத்துக்கொள்ளவில்லை பெரியார். 1957-மே திங்கள் 5-ஆம தேதி சாதி ஒழிப்புப் போரைத் தொடங்கினார். தமிழ்நாடெங்கும் 'பிராமணால்' அழிக்கப்பட்டது. சென்னை திருவல்லிக்சேணியில் உள்ள 'முரளீஸ்கபே', 'பிராமணாளை நீக்க மறுத்ததால் நாள்தோறும் தொடர்ந்து மறியல் செய்தும் உயர் சாதி ஆணவம்கொண்ட பார்ப்பான் 'பிராமணாள்' என்பதை அகற்ற மறுக்கிறான். "வெள்ளைக்காரனைவிட தென்னாட்டுப் பார்ப்பான் திமிர் பிடித்தவன்" என்று சரோஜினி நாயுடு கூறியதும், "இந்நாட்டிற்கு ஆடு, மாடு, மேய்ப்பதற்காக வந்த ஒரு பிச்சைக்காரக் கூட்டம், ஒண்ட வந்த கூட்டம் நாட்டுமக்களின் தலைவரை இகழ்ந்துரைக்க முற்பட்டது என்றால், அது அந்தப் பிச்சைக்காரககூட்டத்தின் ஆணவமல்லவா?"— இரா, நெடுஞ்செழியன் எழுச்சி முரசு'.) என்ற பேச்சும், "பார்ப்பானை அய்யரென்ற காலமும் போச்சே" என்று பாரதியார் பாடிவிட்டுச் சென்றுவிட்டார். ஆனால் பார்ப்பானின் இறுமாப்பு போகவில்லை. அப்படியேதான் இருக்கிறது". என வினோபா அவர்கள் பேசியதும், (8-10-56இல் கோவை மாவட்டம் சந்திராபுரம் கிராமத்தில் பேசியது) எவ்வளவு பொருத்தம் என்பதையே இதுகாட்டுகிறது.

திமிர்பிடித்த பார்ப்பானைத் திராவிடத்தைவிட்டு ஏன் வெளியேற்றவேண்டும் என்பதை "பார்ப்பான் எதற்காக இருக்க வேண்டும்? அவனுக்கு என்ன தொழில்? மணி அடிப்பதற்கு. திதி கொடுப்பதற்கு என்றே ஒரு சாதியா? அப்படித்தான் அந்த சாதித் தொழிலை அவர்கள் செய்கிறார்களா? மணியடிக்காவிட்டால் திதி கொடுக்காவிட்டால் யார் குடி என்ன முழுகிப்போய்விடும்?

சொல்லட்டுமே இன்ன காரியத்திற்கு ஆக பார்ப்பான் இருக்க வேண்டும்! பார்ப்பான் இல்லாவிட்டால் இவ்வளவு நட்டம், கஷ்டம் ஏற்படும் என்று. சுரண்டுவதற்கும் பித்தலாட்டம்பண்ணு வதற்குமேவா ஒரு சாதி இருக்கவேண்டும்? மற்றவர்கள் எல்லாம் அந்த சாதி ஆதிக்கத்துக்கு அடிமைபாய் நடக்கவேண்டும்! எனவே தான் சொல்லுகிறோம் பார்ப்பானே வெளியேறு என்று!'' என பெரியார் விளக்குகிறார்.

சாதிக்குப் பாதுகாப்பாக உள்ளதும், வடநாட்டின் அடக்குமுறை அம்புகள் நம்மீது பாய்வதற்கு அதிகாரம் அளிப்பதும் இந்திய அரசியல் சட்டமே. எனவே அதனை நெருப்பில் போட்டு எரித்து வெறுப்பைக் காட்டினோம். 'பிராமணாள்' என்ற உயர்சாதி'லைசென்சை' வைத்துக்கொண்டு 2000 ஆண்டுகளுக்கு மேலாக திராவிடர்களின் உழைப்பை, உரிமையை, உடைமையைக் கவர்ந்தது போதும், நீக்கிவிடு 'பிராமணாளை' என்றால், பண்டாவின் பரம்பரை நேருவையும், பார்ப்பனப் பாது காவலர்களையும்கொண்டு, நம்மைத் திட்டச் சொல் கிறானே தவிர, தங்களைத் திருத்திக்கொள்ள மறுக்கின் றனர். விட்டுக்கொடுக்க மறுக்கும் பார்ப்பனரை விரட்டு வதைத் தவிர வழியில்லை. பெரியாரது இப் போராட்டத் தைப் பற்றி குறைகூறுவோருக்கும், எங்கே போவார்கள் பார்பனர்கள்? என்று கேட்போருக்கும் "ஒரு காலத்தில் சு.ம.வுடன் இருந்தவர் என்ற 'யோக்கியதையை', இன்று ஈனச்செயல் புரிந்து இழந்துவிடவேண்டாம். இன்று பெரியார் துவக்கியுள்ள கிளர்ச்சி பிடிக்கவில்லை யானால் ஒதுங்கி நிற்பது புத்திசாலித்தனம், மோதிக்கொள்வது பைத்தியக்காரத்தனம், தூற்றுவது போக்கிரித்தனம்'' (திராவிடநாடு 21-3-1943) என்ற கூற்றையும், 'நீ கிடைக் கும் ஆடு, மாடுகளை ஓட்டிக்கொண்டு, விந்தியமலையைக் கடந்து, கங்கை வெளிசென்று, அதையும் தாண்டி, கைபர் கணவாயைக் கண்டு, அதின் வழியாக ஆசிய வெளி போகவேண்டுமே. பூர்வீகம் அல்லவா!' (திராவிடநாடு 28-11-1943) என்பதையும், இதற்கு அடுத்தபடியாக 'பார்ப்பனர்களுக்குப் பதவி என்றால், அதிகாரம் என்

றால், பணம் என்றால் இனிக்கும். 'பதவி, அதிகாரம், சம்பளம் அத்தனையும் தருவதாகக்கூறி பார்ப்பனர்கள் அத்தனை பேரையும் ஒரு கப்பலில் ஏற்றிக்கொண்டு போய் வங்காளக்குடாக்கடலில் மூழ்கடிக்க வேண்டும்' என்று நோபல் பரிசுபெற்ற வங்கநாட்டுதேசியத் தலைவர் டாக்டர் பி. சி. ரே கூறியதையும்,

"இப் பார்ப்பனர்கள் தங்கள் குலத் தொழிலான பிச்சையை ஏற்கட்டும், தெருத் தெருவாக! இன்றேல் இதற்குவெட்கப்பட்டால் சூரியனே மறைபாத தங்களுடைய பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் ஆஸ்திரேலியா கிழக்கிந்தியத் தீவுகள் போன்ற இடங்களில் மனித வர்க்கத்தினரின் ஆதிக்தத்திற்கு இன்னும் உட்படாத இடங்கள் இருக்கின்றன; இப் பார்ப்பனர்கள் இங்கிருந்து வெளியேறி இந்த இடங்களுக்குக் குடியேறலாம். எந்த இடத்தில் போய் வசித்தாலும் இவர்கள் அந்தந்த இடங்களுக்குத் தகுந்தாற்போல் தங்களை ஆக்கிக்கொள்ளும் திறமை மிக்கவர்கள்! வேண்டுமானால் செய்த குற்றங்களுக்காக அந்தமானுக்கு நாடு கடத்துவதுபோல் அனுப்பப்பட வேண்டிய தில்லை. தாஙகளாகவே அங்கு சென்று குடியேறட்டும்! பார்ப்பனர்கள் வேளியேறுவது அவர்களுக்கு மட்டுமல்ல இந்தியத் துணைக்கண்டத்திற்கே நன்மையானது" (*By emigration the Brahmins shall undoubtedly better themselves and better india.*) என்று 1892-ஆம் ஆண்டில் சென்னை கவர்னர் லார்ட் வென்லாக் என்பவரிடம் திராவிடப் பெருங்குடி மக்கள் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள மனுவில் கூறப்பட்டுள்ளதையும், முன் வைக்கிறோம்.

1885-இல் ஆரம்பிக்கப்பட்ட காங்கிரசு முதலில் வெள்ளைக்காரர்களோடு உத்தியோகத்துறையில் போராடியது. பின்னர் அவர்களை எதிர்த்துப் பல போராட்டங்களை நடத்தி சட்டசபை நுழைந்தும் வெள்ளையரை ஒழிக்கமுடியாது என்று கண்ட பின்தான் 1942-இல் வெள்ளையனை வெளியேற்ற வேண்டும் என்ற முடிவை பம்பாயில் நடந்த காங்கிரசு மாநாடு முடிவு செய்தது. பெரியாரும் அதே போன்று 30 ஆண்டுகளுக்கு மேலாக பார்ப்பனர்கள் திருந்துவதற்கு வாய்ப்பளித்து விட்டுத் தான், அவர்களைச் சமூக விலக்குச் செய்ய வேண்டு

மென்று கூறுகிறார். சமூக விலக்குச் செய்வது மட்டு மல்லாமல் தொடர்ந்து தொல்லை தரும் இப் பார்ப்பனர் களைத் தமிழக எல்லைக்கு அப்பாலும் விரட்டவேண்டும் என்று பெரியார் கட்டளையிடுகிறார்

தாய்நாடு என்று தமிழ்நாட்டைச் சொல்லும் உரி மையும், பெருமையும் படைத்தவரல்லர் இப் பார்ப்பனர். 'பழுமரம் தேரும் பறவை' போல எங்கெங்கு வசதியும், வாய்ப்பும் உள்ளதோ அங்கெல்லாம் சென்று வாழ் வோரே ஆரியப் பார்ப்பனர். ஆடு, மாடுகளுக்கு வசதி யாகப் புல் இருப்பது கண்டு இந்தியாவிற்கு வந்த ஆரியர் திராவிடர்களை ஏய்த்து ஏற்றம் கொண்டனர். தரணி யாண்ட வேந்தராயினும் தன்னல வாழ்விற்குத் தடையாக இருந்தார்கள் என்றால், தயக்கமின்றி அவர்களின் தலை யைத் துண்டித்து தங்கள் இன்ப வாழ்கைக்கு இடையூறு வாராதிருக்க, பார்ப்பனர் புரிந்த பாதகச் செயல்களின்

## "பார்ப்பானே வெளியேறு!"

### முழங்கியது யார்......?

"வெள்ளையரைப் "போ" என்று கூறி, போகச்செய்ய முடியுமானால், நாமும் ஆரியரையும் அவ்வனமே ஏன் செய்ய முடியாது? "போ வெளியே" என்று கூறும் இந்தமுறை மகாமேதாவித்திட்டமென்றால் அதேபோல் ஆரியரை அகற்ற நாமும் அதைப்போன்றே செய்வதில் தவறு என்ன இருக்க முடியும்?...எனவே காந்தியாரின் போருக்கு ஆள்திரட்ட இத் தமிழகத்தில் எவரேனும் முனைவரேல். பெரியார் படை திரட்டி, "ஆரியரே, உமது ஜென்மபூமி செல்லுங்கள்" என்று கூறிடச் செய்வார் என்பது திண்ணம்" (திராவிடநாடு—28-6-42)

...............

"...நாங்கள் வெள்ளையனை இங்கேயே இருக்கவேண்டு மென்று ஒருபோதும் சொன்னதில்லை. வெள்ளையனோடு வேதியக்கூட்டமும் போகட்டும் என்றுதான் சொல்லுகிறோம்."

(இரா. நெடுஞ்செழியன்—'எழுச்சி முரசு பக்கம் 12)

பட்டியல் இதோ!

நவநந்தர்களைக்கொன்று, நந்த வம்சத்தை, அசோகப் பேரரசை அழித்து, மௌரிய, மொகலாய அரசுகளை வீழ்த்தி, கிரேக்க, போர்ச்சுக்கீசிய, மொகலாய, ஆங்கிலம் போன்ற அன்னிய அரசுகளுக்கு இந் நாட்டின் கதவினைத் திறந்துவிட்ட கயமைச்செயல் புரிந்த சாணக்கியன், ஜாமரின், உமாசந்த் போன்றோர் பார்ப்பனரே. புத்த நந்தியின் மண்டையைப் பிளந்து, சிவாஜியின் அரசைச் சிதைத்து அவன் மைந்தன் சாம்பாஜியைக் கொன்ற கவிகலேஷாவும், மொசிகனாசைக் கொன்ற சாணக்கியனும், அலெக்சாண்டரை, ஹர்ஷனை, ஆதித்த கரிகாலனைக் கொன்றதும், தஞ்சை அழகிரியையும், செங்கமல தாசனையும் கொன்ற வெங்கண்ணாவும், மதுரை மன்னன் திருமலையைக் கொன்றவரும், திப்புசுல்தானைக் காட்டிக் கொடுத்த அன்ன பூர்ணய்பாவும், கிருஷ்ணதேவ ராயரின் 6-ஆவது இளவரசனைக்கொன்ற திம்மண்ண தண்டனும், நந்தனையும வள்ளலாரையும் சுட்டுப் பொசுக்கியவரும், 8000 சமணர்களைக் கழுவேற்றியவரும், காசிராசன், இராசகோபாலனைத் தூக்குமேடைக்கு அனுப்பியவரும், காந்தியைச் சுட்டுக்கொன்ற கோட்சேயும், மைசூர் நீதிபதி மேட்டப்பாவைக் கொல்ல முயன்ற எல். எஸ். ராசு அய்யங்காரும், பெரியார் மாளிகைக்குத்தீயிட முயற்சித்தோரும், தாளமுத்து, நடராசன்களைப் பிணமாக ஆக்கியதும், கல்லக்குடி, தூத்துக்குடியில் சுட்டுக்கொன்றதும், வெண்தாடி வேந்தாரை இன்று வெஞ்சிறையில் தள்ளி மகிழ்வதும் இப் பார்ப்பனரே!

---

## பைந்தமிழர்கடமை பார்ப்பனரை விலக்குவது

### மறைமலையடிகளின் விருப்பம்

"தமிழ் மக்கள் எல்லார்க்கும் தொடர்பாகத் தீதுபுரிந்து வரும் பார்ப்பனரை நஞ்சினுங்கொடியராக நினைந்து அவர் எவ்வகையினுந் தம்பால் அணுகுதற்கு இடந்தராது விழிப்பாயிருத்தலே தமிழர் ஒவ்வொருவரும் கருத்தூன்றிக் கைக்கொள்ளற்பாலதாகிய முதற் பெருங்கடமையாகும்."

—வேளாளர் நாகரிகம்—பக். 87.

---

"பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சிக்கில்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார் நாட்டிற்குப் பஞ்சமுமாம் என்றே
சீர் கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே"-திருமந்திரம்519

பார்ப்பனர்கள் புரிந்துள்ள எல்லையற்ற கொடுமையின்விளை வாகத்தான் திருமூலர் போன்ற தமிழ்ப்பெரியார்கள் இத்துணை கடுமையாக எச்சரித்துள்ளார்! 'காரல்மார்க்ஸ்'கூட "இந்தியாவின் சீர்கேட்டிற்குக் காரணம் பார்ப்பனர் தான்" என்று 1853ஜுன்,10ம் தேதி லண்டன், நியூயார்க் 'டெயிலிடிரிபியூன்' என்ற இதழில் எழுதியுள்ளார்.

'திராவிடத்தில் இருள் சூழக்காரணம் ஆரியமே' என கால்டுவெல்லும், திராவிடர்கள் கீழ்நிலைக்குப்போன காரணம் பார்ப்பனர்களின் ஆதிக்கமே' என சாண்டர்ஸ் ('விதர் ஏசியா' என்ற நூலில்) என்பாரும் கூறுகிறார்கள். ஆரியரை, திராவிடர்கள் மிலேச்சர்கள் (Barbarians) என்றே வழங்கினர் என, திவாகரம் கூறுகிறது. அவர் களைப் போரில் வெல்லுவதும், இமயத்தில் கொடி பொறிப்பதையும், தமிழர் வீரமென கொண்டனர் 'ஆரியப்படை வென்ற' என்ற அடைமொழியும், கனகவிசயன் தலையில் கல்லேற்றியதும், 'இப்பால் இம யத்திருத்திய வாள்வேங்கை' (சிலம்பு) ஆரியர் அலரத் தாக்கி (அகம் 396), பேரிசை மரபின் ஆரியர் வணக்கி (பதிற்றுப்பத்து — 2ஆம் பத்து) இவை போன்றவை இதற்குச் சான்றாகும். பிற்கால நக்கீரர், 'ஆரியப் புத்தகப்பேய்கோண்டு புலம்பும் மூர்க்க மாக்களை இன்னேகோண்டு ஏகாக்கூற்றம் தவறு பேரிது டைத்தே தவறு பேரிதுடைத்தே' என கோபப்பிரச் சாரத்தால் வெகுண்டு கூறுகிறார். புத்தாயனன் என்ற காஞ்சி மன்னன் பார்ப்பனர்களை விரட்டினான் என்றும், ஹர்ஷன், தன்னைக்கொல்ல முயன்றதால் 500 பார்ப்பன ரைநாடுகடத்தினான் என்றும்தெரிகிறது. வேதகாலம்முதல்

நீண்ட நெடுங்காலமாக பார்ப்பனரை எதிர்த்துப் போராட்டம் நடந்துகொண்டுதான் இன்று இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. பார்ப்பானின் வாழ்வியல் முறையைத் தெளிவாகத் தெரிந்துகொண்டால், பார்ப்பனரை எளிதில் வெளியேற்ற முடியும்.

உழைக்காதே; ஊரை ஏய்த்து உண்ணு!
எத்தனை பொய்யுரை புகன்றேனும் ஏமாற்றி வாழ்!
விபீடணனைக் கொண்டு விழிப்படைந்தவனை வீழ்த்து!
உறங்கிய மக்கள் விழித்தால் ஓடிவிடு!

என்பதே ஆரியப் பார்ப்பனர் கண்ட வாழ்வுச் சுருக்கம் வாழவைத்த நாட்டை வடவருக்குக் காட்டிக் கொடுத்து வறுமையில் ஆழ்த்திவிட்டு, இன்று இந்நாட்டை விட்டு, டில்லி, பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களுக்குச் சென்று வாழ ஆரம்பிக்கின்றனர். பார்ப்பனர் எல்லோரையும் எப்பொழுதும் ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது என்பதை உணர்ந்துவிட்டனர். ஆனால் வீணரும், விபீடணரும் பார்ப்பனருக்குப் பாதுகாவலராய் இருக்கிறோம் என்று கூறுவதால் இன்னும் கொஞ்ச காலம் இருக்கலாம் என எண்ணிக்கொண்டிருக்கின்றனர், இனிப் பலிக்காது பார்ப்பனர் பித்தலாட்டம், பார்ப்பனர் வெளியேற வேண்டுமென்று சாதி ஒழிப்புப் போர் என்னும் அபாயச் சங்கு ஊதிவிட்டது.

புரோகிதக் கும்பலே புறப்படு!

வேதியக் கூட்டமே வெளியேறு!

என்ற இடிமுழக்கம் எங்கணும் ஒலிக்கட்டும்! ஒலிக்கட்டும்.

★ ★ ★

# ஓடிவிடு பார்ப்பானே!

எழில்கொண்ட தமிழ்நாட்டை எருக்கைவளர்
காடாக ஆக்கி விட்டீர்
பொழிலின்கண் புகுமந்தி அதனழகைப்
போக்கடித்து மகிழு மாப்போல்
பழிகொண்ட நும்செயலை நினைந்துள்ளோம்
களிக்கின்றீர்; பொறுமைக்கு என்றும்
அழிவில்லை எனநினைத்தோம் அதுகுற்றம்
அழகில்லை இனிப்பொ றுத்தல்
உயிரின்மேல் விருப்பிருப்பின் ஓடிவிடும்
ஒண்டமிழர் நாட்டை விட்டே
பயிர்கட்கோர் அழிவுசெயும் களையெனவே
பண்புநிறை தமிழர்க் கென்றும்
செயிர்செய்தீர் ஆரியரே இனி யிருப்பின்
சிலிர்த்தெழுவோம் சிறைக்கும் அஞ்சோம்
மயிரளவு நிலங் கூட உமக்கில்லை
வண்டமிழர் நாட்டின் கண்ணே

— வன்னிவேந்தன்

…தியா பிரிண்டிங் ஒர்க்ஸ், மதுரை: 58.